மலர்-3 இதழ்-49 செப்டம்பர் 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# பெண்கள் பூச்சூடுவதன் அவசியமும் ரகசியமும்



# கர்ண தேவதைகள்

## காதுகளில் கடுக்கன் அணிவதன் ரகசியம்

ஆன்மீக ரீதியாக, காதுகளின் நுனிகளில் கர்ண தேவதைகள் எனப்படும் நல்தேவதைகள் உறைகின்றன. காதுகள் தாம் உணர்ச்சிக ளைத் தூண்டுகின்ற அங்கங்களுள் முக்கியமானதாகும். நல்லதோ, கெட்டதோ, பிறருடைய வார்த்தைகளைக் கேட்டுத்தானே மகிழ்ச்சி, துக்கம், கோபம், குரோதமெனப் பலவித உணர்வுகளுக்கு ஆளாகின்றோம்! காதுகளில் நுழைகின்ற ஒலியினை, சப்தத்தினை முறைப்படுத்தும் தேவதைகளே கர்ணதேவதைகள்!

பூமியில் தங்கமோ, வைரமோ, வெள்ளியோ இருப்பின் அதை எடுக்கும் முறைகளை அறிந்து செயல்பட வேண்டும். அதுபோல, கர்ண தேவதைகள், எவ்வித பேதமுமின்றி, அனைத்து ஜீவன்களின் காதுகளில் உறைந்தாலும், அவற்றின் மஹிமையை அறிந்து "ஆக்கப்படுத்துவோர்க்கே" அவற்றின் பரிபூரண பலன்கள் கிட்டும். முறையாக வெட்டி எடுக்கப்படும் தங்கம் போல், அதாவது கர்ண தேவதைகள் நன்கு செயல்பட,

காதுகளில் தோடுகள், கடுக்கன்களை அணிந்திடில் தங்கம், ஆபரணக் கற்களுக்குரிய தெய்வீகத் தன்மையால், அவை கோயில் கோபுர, தெய்வமூர்த்திகளின், தீர்த்தங்களின், மந்திரங்களின், வேத ஒலிகளின் தெய்வீக சக்தியை ஈர்த்துக் கொள்வதால் காதுகள் புனிதமடைந்து அவற்றில் வசிக்கும் கர்ண தேவதைகளை ஆனந்தப்படுத்துகின்றன.

இல்லையெனில் பூமியில் புதைந்து கிடக்கும் வைரச் சுரங்கம் போல் கர்ணதேவதைகளும் செயல்படாது நிற்கின்றன!.

மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் வாட்சப் எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்

whatsapp: 8825844033
aanmeegamalar@gmail.com





# காதுபிரச்சனைக்கு காதில் பூ



இறைவனுக்குச் சார்த்திய புஷ்பத்தைக் காதுகளில் வைத்தலாகாது என்று எண்ணுவது தவறு. சில குறிப்பிட்ட புஷ்பங்களை உதாரணமாக அடுக்கு மல்லிகைப் பூக்களைக் குறித்த நேரத்தில் தினமும் காதுகளில் வைத்து வந்தால் சில அற்புதமான பலன்களை எளிதில் பெற்றிடலாம். மந்தமான காதும் சீர் பெறும்.

திருக்கழுக்குன்றம் அருகே ஓரகடம் என்னும் சிற்றூரில் அமர்ந்து ஸ்ரீவாடாமல்லீஸ்வரர் ஈஸ்வரன் அருள்பாலிக்கின்றார்.

தாமரைகள் பூத்துக் குலுங்கும் தடாகம்! அமைதியான மிகச்சிறிய குன்றின் மேல் ஒரேயொரு சந்நிதியுடன் விளங்கும் சிவாலயம்! இந்த சிவலிங்க மூர்த்திக்கு மல்லிகைப்பூ சாற்றி, மல்லிகைப் பூக்களாலேயே அபிஷேகம் செய்து, இறைப்பிரசாதமான மல்லிகைப் பூக்களைக் காதுகளில் வைத்து சந்நிதியை அடிப்பிரதட்சிணம், அங்கப் பிரதட்சிணம் செய்து வர எத்தகைய காது சம்பந்தமான நோய்களும் நீங்குவதோடு அவதூறு, பொய், வீண் பழிகளால் ஏற்பட்ட அலுவலக, உத்யோகப் பிரச்னைகள், உறவுத் துன்பங்கள், திருமணத் தடங்கல்கள் போன்றவை நிவர்த்தியாகி மீண்டும் நன்மதிப்பைப் பெற்றிடலாம். மேலும் பிறருடைய பேச்சுக்களை நம்பியதால் விளைந்த கணவன் மனைவி உறவுப் பிரிவுகளையும் ஒன்று கூட்டி, நல்வித தாம்பத்ய வாழ்வு மலர அருள்மிகு வாடாமல்லீஸ்வரர் அற்புதமான முறையில் அருள்புரிகின்றார்.

அடிக்கடி கர்ப்பம் நழுவுவதால் சந்ததியின்றி வருத்தமுறுவோர் இங்குள்ள தாமரைத் தடாகத்தில் நீராடி மஞ்சள் ஆடை தரித்து தம்பதி சகிதம் மடியில் நிறைய மல்லிகைப் பூக்களைச் சுமந்து குன்றின் மேல் பக்தியுடன் ஏறிடுக! ஸ்ரீவாடாமல்லீஸ்வரருக்கு மல்லிகையால் அர்ச்சனை, அபிஷேகங்களைச் செய்து, எத்தனை ஏழைச் சுமங்கலிப் பெண்களுக்கு மல்லிகைப் பூவினைப் (தாமே தொடுத்துக் கட்டியது) பிரசாதமாக, மஞ்சள், மஞ்சள் புடவை/ ரவிக்கைகளுடன் அளித்து வருகின்றார்களோ அந்த அளவிற்குப் புண்யசக்தி மிகுந்து கர்ப்பப்பை வலுப்பெற்றுக் கரு நன்கு தங்கி சந்ததி விருத்தியடையும். இங்கு தான் தர்மசம்வர்த்தினியாக ஆதிபரா சக்தி தவமிருந்து ஸ்ரீவாடாமல்லீஸ்வரரை அடைந்ததோடன்றி, இவ்வற்புதத் தலத்தில் தான் ஸ்ரீரகுநாதப் பெருமாளாக, அமர்ந்த கோலத்தில் உள்ள ஸ்ரீராமரையும், சீதையையும் ஒன்றாக தரிசிக்கும் பாக்யத்தையும் பெற்றாள்! அருகிலுள்ள ஸ்ரீரகுநாதப் பெருமாள் ஆலயத்தின் மஹிமையை உய்த் துணர, ஸ்ரீராமரையும் சேவித்துத் திருவருளைப் பரிபூரணமாக பெற்றிடுக!

– மு.கிருஷ்ண மோகன்
8526223399



# விநாயகரும் எலி வாகனமும்

விநாயகப் பெருமானின் மீது அதிகமான அன்பும் பக்தியும் கொண்டவன் கிரவுஞ்சன் என்ற கந்தர்வன், இமயமலையின் அழகை ரசித்துக் கொண்டு வானில் பறந்து கொண்டிருந்தான் கிரவுஞ்சன், அந்த சமயம் அருகில் இருந்த பூந்தோட்டத்தில் பூத்துக் குலுங்கியிருந்த மலர்களை ரசித்தவண்ணம் செல்லும் போது, அங்கு அழகிய மங்கை ஒருவள் பூப்பறித்துக் கொண்டிருப்பதை கவனித்தான். அந்த மலர்களைவிட அந்த பெண் மிகுந்த அழகாக இருந்ததால் அவள் மீது மோகம் கொண்டான்.

அந்தப் பெண்ணுடன் பேசி, அவளை எப்படியாவது திருமணம் செய்து, தன்னுடன் தேவலோகத்துக்கு அழைத்துச் சென்று விட வேண்டுமென்று எண்ணினான்.



பூப்பறித்துக் கொண்டிருந்த பெண்ணை நெருங்கி, ''பெண்ணே, தேவலோகத்தைச் சேர்ந்த கந்தர்வனான நான் வான் வழியாகச் சென்று கொண்டிருந்த போது, உன் அழகைக் கண்டு மயங்கிக் கீழிறங்கி வந்தேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்'' என்றான்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அந்தப் பெண், ''கந்தர்வனே, நான் சவுபரி முனிவரின் மனைவி மனோரமை. என் மேல் நீ கொண்ட தவறான எண்ணத்தை மாற்றிக் கொண்டு, இங்கிருந்து சென்றுவிடு'' என்று எச்சரித்தாள்.

ஆனால் காமத்தின் பிடியில் அகப்பட்டுக் கொண்ட அந்த கந்தர்வன், ''நீ ஒரு முனிவரைத் திருமணம் செய்து கொண்டு, ஒரு பணிப்பெண்ணைப் போல் வாழ்ந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாய். என்னைத் திருமணம் செய்து கொண்டால் மிகவும் மகிழ்ச்சியாக வாழலாம்'' என்று ஆசை வார்த்தைகளை கூறினான்.

அதைக் கேட்டுக் கோபமடைந்த அவள், ''நான் இன்னொருவரின் மனைவி என்று சொல்லியும், அதைக் கேட்காமல் என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைப்பது உனக்குத் தவறாகத் தெரியவில்லையா?'' என்றாள்.

''இதிலென்ன தவறு இருக்கிறது? முனிவருடன் இருப்பதை விட, என்னைப் போன்ற கந்தர்வனுடன் இருப்பதில்தான் இன்பம் அதிகம். இந்த முனிவரைக் கைவிட்டு என்னுடன் வந்தால், உன்னைத் தேவலோகம் அழைத்துச் செல்கிறேன். அங்கு நாம் இருவரும் மகிழ்ச்சியாக வாழலாம்'' என்று கூறியவன், மனோரமையை நெருங்கினான்.

காமத்தின் வலையில் அகப்பட்ட அவனின் எண்ணத்தை அறிந்த முனிவரின் பத்தினி மனோரமை, அவனிடமிருந்து தப்பிக்க ஆசிரமம் நோக்கி ஓடினாள்.

பின் தொடர்ந்து வந்த கந்தர்வன், ஆசிரமத்துக்குள் நுழைந்த மனோரமையின் கையைப் பிடித்து நிறுத்தினான். இதைச் சிறிதும் எதிர்பார்க்காத அவள், ''சுவாமி! என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று சத்தமிட்டாள். மனைவியின் சத்தத்தைக் கேட்டு ஆசிரமத்திலிருந்து வெளியில் வந்தார் சவுபரி முனிவர்.

நிலையை உடனடியாக புரிந்து கொண்ட முனிவர், ''கந்தர்வனே! என் மனைவியை விட்டு இங்கிருந்து போய்விடு. இல்லையெனில் என் கோபத்துக்கு ஆளாவாய்'' என்று கூறினார்.

காம மயக்கத்தில் இருந்த கந்தர்வனுக்கு அவரது குரல் கூட காதில் விழவில்லை, அவன் மனோரமையை கவர்ந்து செல்வதிலேயே குறியாக இருந்தான்.

இதனால் கோபமடைந்த முனிவர், ''கந்தர்வனே! என் மனைவியை கவர்ந்து செல்ல நினைத்த நீ, மண்ணைத் தோண்டி வளையில் ஒளிந்து வாழும் எலியாக மாறி துன்பப்படுவாய்'' என்று சாபமிட்டார்.

முனிவரின் சாபத்தைக் கேட்டு சுயநினைவுக்குத் திரும்பிய கந்தர்வன் தன்னுடைய செயலுக்காக வருந்தினான். ''முனிவரே! அடுத்தவரின் மனைவியை அடைய நினைத்த எனக்கு, தாங்கள்



கொடுத்த சாபம் சரியானதுதான். நான் நீங்கள் கொடுத்த சாபத்தை அப்படியே முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். இருப்பினும், எனது தவறைத் தாங்கள் மன்னித்தருள வேண்டும்'' என்றான்.

இதனால் மனமிரங்கிய முனிவர், ''கந்தர்வனே! தவறு செய்வது அனைவரின் இயல்பாக இருக்கலாம். ஆனால், தேவலோகத்தைச் சேர்ந்த உனக்கு இப்படியொரு எண்ணம் வந்திருக்கவே கூடாது. நீ தவறை உணர்ந்து, நான் கொடுத்த சாபத்தையும் முழுமையாக ஏற்றுக் கொண்டிருப்பதால் நான் உன்னை மன்னிக்கிறேன். பிற்காலத்தில் உனக்கு இந்த எலி உருவத்திலேயே மிகப்பெரிய சிறப்பு கிடைக்கும்'' என்றார்.

முனிவரின் சாபத்தினால் கந்தர்வன், மிகப் பெரிய எலியாக மாறினான். அந்த எலி காட்டிற்குள் சென்று பல இடங்களையும் தோண்டி நாசப் படுத்திக் கொண்டிருந்தது. ஒவ்வொரு இடமாக மாறி, மாறிச் சென்ற எலி, காட்டிற்குள் இருந்த பராசர முனிவரின் ஆசிரமப் பகுதிக்குள் சென்றது. அந்த இடம் பிடித்துப் போனதால், அங்கேயே ஒரு வளை தோண்டித் தங்கிக்கொண்டது.

அந்த எலி ஆசிரமப் பகுதிக்குள் இருந்த மரங்களின் வேர்களைக் கடித்து, மரங்களைக் கீழே விழச் செய்து அங்கிருந்தவர்களை அச்சுறுத்திக்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

கொண்டிருந்தது. மேலும், ஆசிரமத்தின் பல பகுதிகளிலும் வளை தோண்டி சேதப்படுத்தியது.

காலம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. இந்த நிலையில், அபினந்தன் எனும் அரசன், தன்னுடைய பதவியும், அதனால் கிடைக்கும் சிறப்பும் நீடித்திருக்க வேண்டும் என்று மிகப்பெரிய வேள்வி ஒன்றை நடத்த முடிவு செய்தான். வேள்விக்கான பணிகளையும் அவனே முன்னின்று செய்து வந்தான். இந்த வேள்வி முழுமையாக நடந்து முடிந்து விட்டால், அந்த அரசனுக்கு இந்திரப் பதவி கிடைத்தாலும் கிடைத்து விடுமென்று நினைத்து இந்திரன் அச்சமடைந்தான்.

எனவே தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அபினந்தனை வேள்வி செய்ய விடாமல் தடுக்க இந்திரன் முடிவு செய்தான். இதற்காக காலநேமி என்ற அரக்கனை பூலோகத்திற்கு அனுப்பிவைத்தான். அந்த அசுரன், அபினந்தன் செய்து வந்த வேள்விகளை எல்லாம் அழித்து வந்தான். அசுரனின் தொல்லைகளைப் பொறுக்க முடியாத முனிவர்கள், அவனை அழித்து உதவும்படி சிவபெருமானிடம் முறையிட்டனர்.

சிவபெருமான் அவர்களிடம், 'இன்னும் சிறிது காலம் பொறுத்திருங்கள். என் மகன் விநாயகன் அவனை அழிப்பதற்காகப் பூலோகத்தில் தோன்ற இருக்கிறான். அவன் அரக்கன் காலநேமியை அழித்து, வேள்விப் பணிகள் தொடர உதவி செய்வான்' என்று அருளினார்.

சிவபெருமானின் திருவிளையாடல் ஆரம்பமானது. விநாயகர் அவதாரம் தோன்றி, அந்த முனிவர்கள் யாகம் செய்யும் காட்டின் ஒருபகுதியில் குளக்கரையில் சிறுபாலகனாக விநாயகர் விளையாடிக் கொண்டிருந்தார்.

காட்டிற்குள் இருந்த அந்த குளத்தில் நீராட வந்த பராசர முனிவர், குழந்தையை கண்டெடுத்து தன் ஆசிரமத்தில் வைத்து வளர்க்கத் தொடங்கினார். ஆசிரமத்தில் வளர்ந்து வந்த விநாயகர், அங்கிருக்கும் மரங்களில் ஏறி விளையாடுவார். அதேபோல் ஒரு மரத்தில் ஏறி விநாயகர் விளையாடியபோது, மரத்தின் அடியில் இருந்த எலியானது, வேர்களைக் கடித்து மரத்தின் பலத்தை இழக்கச்செய்து அந்த மரத்தை சாித்தது. மரத்தின் அடியில் வளை தோண்டி வசித்த பெரிய எலிதான், மரம் கீழே விழ காரணம் என்று விநாயகருக்கு தெரியவந்தது.

அந்த எலியைக் கொல்வதற்காக, தன்னிடம் இருந்த பரசு ஆயுதத்தை எடுத்து எலியை நோக்கி வீசினார் விநாயகர். ஆயுதத்தைப் பார்த்ததும் எலி வளைக்குள் புகுந்து ஓடியது. ஆனால் பரசு ஆயுதம் எலியை விடாமல் துரத்தியது. வளை தோண்டியபடி பாதாளம் வரைச் சென்ற எலி சோர்வடைந்தது. அதற்குமேல் செல்ல முடியாமல், பூமியின் மேற்புறத்தை நோக்கி ஓடி வந்தது. ஆனால் பரசு ஆயுதம் எலியை கொல்லாமல், விநாயகரின் முன்பாக கொண்டு போய் நிறுத்தியது.

விநாயகப் பெருமான் உருவத்தை நேருக்கு நேராகப் பார்த்ததும், அந்த எலிக்கு தான் கந்தர்வனாக இருந்ததும், சவுபரி முனிவரிடம் சாபம் பெற்றதும் நினைவுக்கு வந்தது. விநாயகப் பெருமானிடம் தனது முன் கதையைச் சொல்லி வருத்தப்பட்டது. தன் தவறை மன்னிக்கும்படி வேண்டியது.

எலியின் கதையைக் கேட்டு மனமிரங்கிய விநாயகர், ''மூஷிகனே கவலைப்படாதே! உனக்குச் சாபம் கொடுத்த முனிவரிடம், சாபத்திற்கு விமோசனம் கேட்காமல், நான் செய்த தவறுக்கு தாங்கள் கொடுக்கும் சாபத்தை அப்படியே ஏற்றுக் கொள்வதாக கூறிவிட்டபடியால், உனக்கு என்னால் சாப விமோசனம் வழங்க முடியாது. நீ கந்தர்வனாக இருந்த போது, என் மேல் அதிக பக்தி கொண்டிருந்தாய். எனவே, நான் உன்னை என் வாகனமாகக் கொள்கிறேன். இதன் மூலம் நான் இருக்கும் இடங்களிலெல்லாம் உனக்கும் மரியாதை கிடைக்கும்'' என்று அருளினார்.



அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த எலி, விநாயகரை வணங்கி நின்றது. விநாயகப் பெருமானும் மூசிகனை வாகனமாக மாறிய எலி விநாயகரை சுமந்து கொண்டு, முனிவர்களுக்கு தொல்லை கொடுத்து வந்த அசுரன் காலநேமியை அழிக்க உதவியது.

அன்றிலிருந்து விநாயகரின் சன்னதியிலும் எலியை வாகனமாக வைக்கப்பட்டது. அன்றிலிருந்து எந்த விதமான காரியங்களிலும் வெற்றி பெறவேண்டுமானால் விநாயகரை அவரது வாகனமான எலியுடன் வணங்கி சென்றால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

# பயத்தையும் ஞாபக மறதியையும் போக்கும் மந்திரம்

சிலருக்கு எதைக்கண்டாலும் பயமும், மறதியும் இருக்கும். அப்படிப்பட்டவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறையை பின்பற்றி வரலாம்.

முதலில் ஒரு நோட்டு புத்தகத்தை எடுங்கள். "சிவாயநம' "ஓம் நமசிவாய' ஓம் சக்தி என்பவற்றில் ஒன்றை 108 தடவை எழுதுங்கள். நீங்கள் பெருமாள் பக்தராக இருந்தால் "ஓம் நமோ நாராயணாய நமஹ, லட்சுமி நரசிம்மம் சரணம் பிரபத்யே' ஸ்ரீராமஜெயம் என்பவற்றில் ஒன்றை இதே போல எழுதுங்கள்.

நீங்கள் எதை மறந்தாலும், இதை மட்டும் மறக்காமல் தினமும் எழுதி விட வேண்டும். முதலில் இது ஞாபக சக்தியை அதிகரிக்கும் பயிற்சி.

அடுத்து, இந்த நாமங்கள் பயத்தை போக்க வல்லவை. பயிற்சி மறதியைப் போக்கடிக்கும். ஞாபகசக்தி பயத்தைப் போக்கடிக்கும்.

ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

மேலும் தொடர்பு கொள்ளவும்

8825844033

## ஆறு வழிகளை கடைபிடியுங்கள்

# மருத்துவமனையை மறந்து விடுங்கள்

ஆறு வழிகளை நீங்கள் கடைப்பிடித்தால் உங்களுக்கு உள்ள பிரச்சனை தீர்வுடன் வாழ்நாள் முழுவதும் எந்த நோய்களும் வராது.

1. பசி
2. தாகம்
3. உடல் உழைப்பு
4. தூக்கம்
5. ஓய்வு
6. மன அமைதி

### பசி

உங்கள் உடலுக்கு உணவு தேவையா இல்லையா என்பது சுவரில் தொங்கும் கடிகாரத்திற்கு தெரியுமா? தெரியாதல்லவா பின் ஏன் நேரம் பார்த்து சாப்பீடுகிறீர்கள்.

யாரெல்லாம் நேரம் பார்த்து வேளாவேளைக்கு சரியாக சாப்பிடுகிறாரோ அவர் மிகப்பெரிய நோயாளி ஆகப்போகிறார் என்று அர்த்தம். இதைத்தான் வள்ளுவப்பெருமான் சொல்கிறார்

“மருத்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.”

மேற்கண்ட குறளின் விளக்கம், நாம் ஏற்கனவே உண்ட உணவு செரித்த பின் மீண்டும் பசித்து சாப்பிட்டால் இந்த உடலுக்கு எந்த மருந்தும் தேவையில்லை என சொல்லியிருக்கிறார்.

“தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.”

மேற்கண்ட குறளின் விளக்கம், பசியின் அளவு தெரியாமல் அதிகமாக சாப்பிட்டால் நோய் அளவில்லாமல் வரும் என்கிறார்.

பசியின் அளவு தெரியாமல் அதிகமாக உண்டால் நோய் அளவில்லாம் வரும் போது, பசியே இல்லாமல் சாப்பிட்டால் என்னவாகும்!

உணவை பசித்து, மென்று, சுவைத்து கவனித்து, இடையில் தண்ணீர் குடிக்காமல் உண்ண வேண்டும்.

இதைநாம் சரியாக செய்தால் ஆரோக்கியத்தின் முதல் படியில் நாம் செல்லலாம்.

### தாகம்!

அனைவருக்கும் பொதுவாக தண்ணீரின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது, இது தவறு. Acயில் வேலை பார்க்கும் நபருக்கு 3 லிட்டர் தண்ணீர் தேவைப்படாது, மீறி குடித்தால் சிறுநீரகம் பாதிக்கப்படும்.

வெயிலில் கட்டிட வேலை செய்பவருக்கு 3 லிட்டர் போதாது, இவருக்கு அதிகம் தேவைப்படும், இவர் 3 லிட்டர் குடித்தால் சிறுநீரகம் பாதிக்கப்படும்.

சரி எவ்வளவுதான் குடிப்பது என கேட்கிறீர்களா! ஒரு மனிதர் உண்ணும் உணவு, வாழும் இடம், செய்யும் வேலை இதை பொருத்து தண்ணீரின் அளவு மாறுபடும்.

தாகம் எடுக்கும் போது குடியுங்கள், தாகம் தீரும் வரை குடியுங்கள், மீண்டும் தாகம் எடுத்தால் குடியுங்கள். அளவுகளை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.



Ro, Mineral, Filter, boiled water பேராபத்து, இதை நீங்கள் குடித்தால் சிறுநீரகம் சிதைந்து, இது தொடர்பான ஆயிரம் நோய்கள் வரும், சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால் குழந்தை பிறப்பை பாதிக்கும்.

தண்ணீரை இயற்கை முறையில் சுத்திகரிக்க பருத்தி துணியில் வடித்து மண் பானை, செம்பு பாத்திரத்தில் ஊற்றி வைத்து குடிக்கலாம்.

தண்ணீரை இயற்கை முறையில் சுத்திகரித்து குடித்ததின் மூலம் ஆரோக்கியத்தின் இரண்டாவது படியை நாம் அடையலாம்.

### உடல் உழைப்பு!

ஒரு வாகனத்தை 3 மாதம் ஓட்டாமல் வைத்திருந்தால் என்னவாகும். அதே நிலைதான் உடலுக்கும். குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது உடல் உழைப்பு அவசியம். இதற்கு நீங்கள் Walking, yoga, Gym இதை செய்ய வேண்டிய அவசியம் இல்லை, வீட்டு வேலைகளை இயந்திரத்துணையின்றி செய்தாலே போதுமானது.

உடலுக்கு வேலை கொடுத்ததின் மூலம் ஆரோக்கியத்தின் மூன்றாம் படியை நாம் அடையலாம்.

### தூக்கம்!

யாருக்கு தூக்கம் வரும்? உடலுக்கு வேலை கொடுப்பவருக்கே தூக்கம் வரும். மனதிற்கு வேலை கொடுப்ப வருக்கு தூக்கம் வராது. மன திற்கு மட்டும் வேலை கொடுத்துவிட்டு நீங்கள் தூக்கத்தை எதிர்பார்க்க கூடாது.

ஒரு நாள் குனிந்து நிமிர்ந்து உடலுக்கு வேலை கொடுத்து பாருங்கள் எப்படி தூக்கம் வருகிறதென்று. ஒரு மனிதன் உயிர் வாழ உணவு, காற்று, நீர் எவ்வளவு முக்கியமோ அதே அளவு தூக்கமும் முக்கியம்.

இரவு கண் விழித்து வேலை பார்ப்பது உங்கள் உயிருக்கே ஆபத்தாக முடியும்.

பகலில் உறங்கி சமன் செய்யதுவிடலாம் என நினைக்காதீர்கள். நீங்கள் தலைகீழாக நின்றாலும், கோடி கோடியாய் கொடுத்தாலும் இரவு உறக்கத்தை உங்களால் ஈடு செய்யவே முடியாது. இரவு தூங்க வேண்டிய சரியான நேரம் 9மணி.

இரவு உறக்கம் சரி இல்லை என்றால் கல்லீரல், பித்தப்பை தொடர்பான ஆயிரம் நோய்கள் வரும். நீங்கள் இரவு 9மணிக்கு உறக்கச்சென்றதின் மூலம் ஆரோக்கியத்தின் நான்காம் படியில் நாம் அடி எடுத்து வைத்துள்ளோம்.

### ஓய்வு!

சளி, காய்ச்சல், தலைவலி, அசதி போன்ற உடலின் கழிவு நீக்க செயலுக்கு நாம் ஓடி ஓடி மருந்து மாத்திரை எடுக்காமல், உடலிற்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

சளி, காய்ச்சலுக்கு ஆங்கில மருத்து எடுப்பது தற்கொலை செய்வதற்கு சமம். உடல் கேட்கும் போது ஓய்வு கொடுத்ததால் ஆரோக்கியத்தின் ஐந்தாம் படியில் நாம் அடைந்துள்ளோம்.

### மன நிம்மதி!

ஐந்து கட்டத்தை வெற்றிகரமாக தாண்டி வந்த நமக்கு மன நிம்மதி என்று ஒன்று இல்லை என்றால் பின் கீழ் சறுக்கி பழைய நிலைக்கு சென்றுவிடுவீர்கள்.

மனம் நிம்மதியாக இருக்க யாரிடமும் எதற்காகவும் கடன் வாங்காதீர்கள். உங்களுக்கு பிடித்ததை படியுங்கள், பிடித்த வேலை செய்யுங்கள், மாதம் ஒரு நாளாவது உங்களுக்கு பிடித்த சுற்றுலா தலங்களுக்கு சென்று வாருங்கள்.

மனதை நிம்மதியாக வைக்கும் கலைகளை கற்று தேர்ந்தால் நாம் ஆறாவது படியையும் கடந்து விட்டோமென்றால் “உடலில் ஒரு சதைப்பிண்டம் இருக்கிறது அது சீர் பெற்றால் உடல் முழுவதும் சீர் பெற்று விடும் அது சீர் கெட்டால் உடல் முழுவதும் சீர் கெட்டு விடும் அது தான் உள்ளம்.” இந்த ஆறு நிலைகளையும் வெற்றிகரமாக கையாண்டவர்கள் கண்டிப்பாக எந்த மருத்துவமனைகளையும் நாட வேண்டிய அவசியம் ஏற்படாது.

# சிவ மந்திரமும் பலன்களும்

நங்சிவயநம என்று உச்சரிக்க திருமணம் நிறைவேறும்
அங்சிவயநம என்று உச்சரிக்க தேக நோய் நீங்கும்
வங்சிவயநம என்று உச்சரிக்க யோகசித்திகள் பெறலாம்.
ஓம் ஓம் அங்சிவயநம என்று உச்சரிக்க ஆயுள் வளரும், விருத்தியாகம்
ஓம் ரீம் ஓம் சிவ அங் சிவாய என்று உச்சரிக்க எதற்கும் நிவாரணம் கிட்டும்.
கிலி நமசிவய என்று உச்சரிக்க வசிய சக்தி வந்தடையும்
ஹிரீநமசிவய என்று உச்சரிக்க விரும்பியது நிறைவேறும்
ஐயும் நமசிவய என்று உச்சரிக்க புத்தி வித்தை மேம்படும்.
நம சிவய என்று உச்சரிக்க பேரருள், அமுதம் கிட்டும்.
உங்யுநமசிவய என்று உச்சரிக்க வியாதிகள் விலகும்.
கிலியுநமசிவய என்று உச்சரிக்க நாடியது சித்திக்கும்
சிங்வங்நமசிவய என்று உச்சரிக்க கடன்கள் தீரும்.
நமசிவயவங் என்று உச்சரிக்க பூமி கிடைக்கும்.
சவ்வுஞ் சிவாய என்று உச்சரிக்க சந்தான பாக்யம் ஏற்படும்.
சிங்றீங் என்று உச்சரிக்க வேதானந்த ஞானியாவார்
உங்றீம் சிவயநம என்று உச்சரிக்க மோட்சத்திற்கு வழி வகுக்கும்.
அங்நங் சிவாய என்று உச்சரிக்க தேக வளம் ஏற்படும்.
அவ்வுஞ் சிவயநம என்று உச்சரிக்க சிவன் தரிசனம் காணலாம்.
ஓம் நமசிவாய என்று உச்சரிக்க காலனை வெல்லலாம்.
லங் ஸ்ரீறியுங் நமசிவாய என்று உச்சரிக்க தானிய விளைச்சல் மேம்படும்.
ஓம் நமசிவய என்று உச்சரிக்க வாணிபங்கள் மேன்மையுறும்
ஓம் அங்உங்சிவயநம என்று உச்சரிக்க வாழ்வு உயரும், வளம் பெருகும்.
ஓம் ஸ்ரீறியும் சிவயநம என்று உச்சரிக்க அரச போகம் பெறலாம்.
ஓம் நமசிவய என்று உச்சரிக்க சிரரோகம் நீங்கும்.
ஓங் அங்சிவாய நம என்று உச்சரிக்க அக்னி குளிர்ச்சியைத் தரும்.

ஒரு லட்சம் தடவை சொன்னால் தான் பலன்கள் அபரிவிதமாக இருப்பதை நீங்கள் உனரலாம் ஒரே தடவை சொல்ல தேவை இல்லை தினமும் கொஞ்சம் சொன்னால் போதும்.

தூய்மை நம் உள்ளத்தில் பரவுமானால் நம் செயல் பளிங்கு போல் காட்சி அளிக்கும். வெற்றித் திருமகளைத் தினமும் வணங்குங்கள். அவர்களுடைய அருளுக்கு ஆளாகிவிடுங்கள். அவர்களை பார்ப்பதற்கு நாட்களைக் கடத்தாதீர்கள்.

மு.கிருஷ்ண மோகன்
9843096462 , 9976192660





# ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நடைபெறும் மகாபாரதப் போர்



மகாபாரதம் ஒரு இதிகாசம். ஒரு மாபெரும் காவியம். அது உண்மை என்பதை விட அது ஒரு தத்துவம். அதை தான் அனைவரும் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனிடமும் மகாபாரத கதை மறைந்துள்ளது. ஒருவகையில் பார்த்தால் தனி மனிதனின் வாழ்க்கைதான் மகாபாரதம். அதன் விரிவாக்கத்தை பார்ப்போம்.

பஞ்சபாண்டவர்கள் வேறு யாருமல்ல. கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகிய நம் ஐம்புலன்கள் தான் !!!!

கௌரவர்கள் யார் தெரியுமா?

இந்த ஐந்துபுலன்களை தினந்தோறும் தாக்கி தங்களுக்கு இரையாக்க முயற்சிக்கும் தீமைகள் தான் கௌரவர்கள் !!!

எண்ணிக்கையில் பெரிதான இவர்களை எதிர்த்து (ஐம்புலன்களால்) போரிட முடியுமா? முடியும்! எப்போது தெரியுமா? கிருஷ்ண பரமாத்மா உன் தேரை செலுத்துவதன் மூலம்.

“கிருஷ்ணர் தான் உன் மனசாட்சி. உன் ஆன்மா. உன் வழிகாட்டி. அவர் பொறுப்பில் உன் வாழ்க்கையை நீ ஒப்படைத்தால் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை.”

கௌரவர்கள் தீயவர்கள் என்றால் அப்போது பெரியவர்களான துரோணாச்சாரியாரும் பீஷ்மாரும் அவர்கள் பக்கம் நின்று அவர்களுக்காக ஏன் போரிடுகிறார்கள்? என்ற கேள்விக்கு விடை...

வேறொன்றுமில்லை. நாம் வளர வளர உனக்கு மூத்தவர்கள் குறித்த நம் கண்ணோட்டம் மாறுகிறது.

வளரும் காலகட்டங்களில் யாரெல்லாம்குற்ற மற்றவர்கள், அப்பழுக்கற்றவர்கள் என்று எண்ணினோமோ அவர்கள் உண்மையில் அப்படிகிடையாது.

அவர்களிடமும் தவறுகள் உண்டு என்று உணர்கிறோம்.

எனவே அவர்கள் நமது நன்மைக்காக இருக்கிறார்களா, நமக்கு தேவையா இல்லையா என்று நாம் தான் தீர்மானிக்க வேண்டும்.

மேலும் அவர்கள் நம் நன்மைக்காக போராட வேண்டும் என்று நாம் ஒரு கட்டத்தில் விரும்புவோம்.

இது தான் வாழ்க்கையின் கடினமான பகுதி. கீதையின் பாடமும் இது தான்.

அப்போது கர்ணன்?

நம் ஐம்புலன்களின் சகோதரன் அவன். அவன் பெயர் தான் ஆசை, மோகம், அவன் நம் இந்திரியங்களின் ஒரு பகுதி, நம்முடன் பிறந்தவன்.

ஆனால், தீமைகளின் பக்கம் தான் எப்போதும் நிற்பான். தான் செய்வது தவறு என்று அவனுக்கு தெரியும். ஆனாலும் ஏதேனும் சாக்குபோக்கு சொல்வான். நம் விருப்பம் போல. ஆசை போல. தீயவற்றுக்கு துணைபோகத் தானே மனம் ஆசைப்படுகிறது?

இப்படித்தான் மகாபாரதக் கதை, ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையில் ஒத்துப்போவதால், மனித வாழ்வின் அற்புத வழிகாட்டி என்று கூறப்படுகிறது.





## ஸ்ரீசனீஸ்வரர், எமன், அருணன், கருடன், வாலி, சுக்ரீவன் ஆகியோரின் அவதாரத் திருத்தலம்

# திருமீயச்சூர் ஸ்ரீலலிதாம்பாள் திருக்கோயில்

தமிழகத்தில் ஸ்ரீலலிதாம்பாள் எனும் திருநாமத்துடன் அம்பிகை குடியிருந்து அருள்பாலிக்கும் தலம் திருமீயச்சூர். திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது, இந்தத் தலத்துக்கு ஏகப்பட்ட பெருமைகள் உள்ளன. ஸ்ரீசனீஸ்வரர், எமதருமர், அருணன், கருடன், வாலி, சுக்ரீவன் ஆகிய ஆறு பேரின் அவதாரத் திருத்தலம் இது!

திருமீயச்சூர் தலத்துக்கு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் என எங்கிருந்தெல்லாமோ ஏராளமான அன்பர்கள், தினமும் வந்தபடி இருக்கின்றனர். சிலிர்ப்பும் பக்தியும் பொங்க, தரிசித்துச் செல்கின்றனர். காரணம்ஞ் இந்தத் தலத்தின் நாயகி, ஸ்ரீலலிதாம்பாள்!

உலகின் எல்லா இடங்களில் இருந்தும், ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம் பாராயணம் செய்து, அவளை அனுதினமும் மனமுருகிப் பிரார்த்திப்பவர்கள் மிக மிக அதிகம்! அதனைப் பாராயணம் செய்தாலே, மன பாரமெல்லாம் போய்விடும். அப்பேர்ப்பட்ட, சக்தியும் சாந்நித்யமும் கொண்ட ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம் உருவான திருத்தலம், திருமீயச்சூர்!

பண்டாசுரன் எனும் அரக்கனால், துன்பங்களுக்கு ஆளான தேவர்கள், ஈசனின் திருவடியைச் சரணடைந்து கதறினர். அரக்கனை அழிக்க, ஸ்ரீபார்வதியை ஸ்ரீலலிதையாக அவதரிக்கச் செய்தார் ஈசன். கடும் உக்கிரத்துடன் தோன்றிய ஸ்ரீலலிதை, சகஸ்ர கோடி வருடங்கள், அரக்கனுடன் யுத்தம் செய்தாள். இறுதியில் அவனை அழித்தொழித்தாள். ஆனாலும் அவளது உக்கிரம் தணியவில்லை.

இந்தக் கோபம், பூமிக்கும் மக்களுக்கும் நல்லதல்ல' என்பதால், 'ஸ்ரீபுரத்தில் தவம் செய்தால், உனது உக்கிரம் தணியும்' என அருளினார் சிவபெருமான். இதையடுத்து ஸ்ரீலலிதை ஸ்ரீபுரத்துக்கு வந்தாள். அங்கே கடும் தவம் புரிந்தாள். அவளுக்குள்ளிருந்து 'வாக் தேவதைகள்' எட்டுப்பேர் வெளிவந்தனர். ஸ்ரீலலிதையைச் சுற்றி வட்டமாக நின்றனர். ஸ்ரீலலிதையின் கூந்தல், கண்கள், கன்னம், நெற்றி, திருப்பாதம் என அவளது அழகை வியந்து, பாடினர்.

'அடடா இத்தனை அழகா எனது கண்கள்? பிறகு ஏன் இவ்வளவு கொடூரமாகப் பார்க்கவேண்டும்?! என் கன்னமும் நெற்றியும் அழகு பொருந்தியிருக்கிறதா? அப் புறம் எதற்காக, முகத்தை உக்கிரமாக வைத்திருக்கவேண்டும்? நெடுநெடுவென, கரிய நிறத்தில் வளர்ந்திருக்கிறதாமே கூந்தல்? அந்தக் கூந்தலை தலைவிரி கோலமாகவா வைத்திருப்பது?!' என யோசித்தாள்.

எட்டுத் தேவதைகளும் அந்த ஸ்தோத்திரத்தைப் பாடப்பாட அவளது உக்கிரம் காணாமல் போனது. அவளுக்குள் சாந்தமும் கருணையும் பொங்கிப் பிரவாகித்தன! அதே தலத்தில் இருந்தபடி, அன்பர்களுக்கு அருட்கடாட்சத்தை அள்ளித்தர திருவுளம் கொண்டாள்.

இதோ இன்றளவும், உலகின் எந்த மூலையில் இருந்து கொண்டு, லலிதா சகஸ்ரநாமத்தை எவர் பாடினாலும், அவர்களது சகல தோஷங் களையும் போக்கி, சகல ஐஸ்வரியங் களைத் தந்து மகிழ்கிறாள். மகிழ்விக்கிறாள். இங்கே, ஸ்ரீசதாசிவ லிங்க பீடத்தில், ஸ்ரீசக்ரத்தில் நின்ற படி, அகில உலகையும் ஆட்சி செய்கிறாள், ஸ்ரீலலிதாம்பிகை!

வருடம் முழுவதும், இங்கே தேர்க்கூட்டம், திருவிழாக் கூட்டம்தான்! ஸ்ரீலலிதாம்பிகைக்கு அன்னப்பாவாடை சார்த்தும் வைபவம், வருடத்தில் மூன்று முறை நடைபெறுகிறது. நவராத்திரியில்ஞ் விஜயதசமியிலும், மாசி மாதத்தின் அஷ்டமி நாளிலும், வைகாசி பௌர்ணமியின் போதும் அன்னப்பாவாடை சார்த்தும் வைபவத்தைக் காண, வெளிமாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வருகின்றனர். சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, வெண் பொங்கல், பட்சணங்கள், பழ வகை கள் என வைத்து, நெய்யை ஊற்றிக் குளம் போலாக்கிவிடுவார்கள். அம்பிகையின் சந் நிதிக்கு முன்னேயுள்ள அர்த்த மண்டபத்தில் இதனை வைத்திருக்கஞ் குளம் போல் ததும்பியிருக்கும் நெய்யில், அம்பிகையின் திருவுருவம் பிரதிபலிக்கும் அழகே அழகு!

மகா பெரியவா, ''இது சாதாரண தலமல்ல; மிக உன்னதமான புண்ணிய க்ஷேத்திரம். பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்திருந்தால்தான், இங்கு வரமுடியும்; அப்படி வந்து தரிசித்தீர்கள் என்றால், ஏழேழு ஜென்மத்துக்கும் உங்களைக் காப்பாள், ஸ்ரீலலிதாம்பிகை!'' என அருளினாராம்!

- Venkataraman Balasubramanian


ஆன்மிகமலர் மெயில் புக்

# பொறாமை பேரழிவை தரும்

கை, கால், காது, கண், நாக்கு, என, அனைத்து உறுப்புகளும் நன்றாக இருப்போர், அங்கஹீனம், காது கேளாமை, பேச்சு இழந்தோர், பார்வையற்றோர் ஆகியோரைப் பார்க்கும் போது, ஆண்டவா... எந்தக் குறையும் இல்லாமல் என்னைப் படைத்தாயே... என்று, இறைவனுக்கு நன்றி சொல்ல மறந்து விடுகிறோம். அதே சமயம், தெருவில், யாராவது சிரித்து பேசி செல்வதைப் பார்த்தால், சிரிப்பைப் பார்... சிரிப்பை! என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு... என்று, சிலருக்கு மனம் வெம்புகிறது.

அடுத்தவர்கள் சற்று மகிழ்ச்சியாக இருந்தால் கூட, இவர்களால் பொறுக்க முடிவதில்லை. இந்த பொறாமை குணத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்து, மகாபாரதத்தில் ஒரு கதை உள்ளது. திருதராஷ்டிரன் மனைவி காந்தாரி, நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள். அவளுக்கு, அரண்மனை வாழ்வு, ஆள், அம்பு, சேனை, ராஜபோகம், பணிப்பெண்கள் என, அனைத்து வசதிகளும் இருந்தன. திருதராஷ்டிரன் தம்பியான பாண்டுவின் மனைவி குந்தியோ, காட்டில் ஒரு வசதியும் இல்லாத சூழலில் வசித்து வந்தாள். இந்நிலையில், குந்திதேவிக்கு, காந் தாரிக்கு முன்னரே, குழந்தை பிறந்து விட்டது. இச்செய்தி, நாட்டில் வாழ்ந்த காந்தாரிக்கு தெரிந்ததும், அவளுக்கு பொறுக்க முடியவில்லை. அவள் உள்ளத்தில் பொறாமைத் தீ, எரிமலை குழம்பாய் வெடித்து, வழிந்தது. அதன் விளைவாக, காந்தாரி, ஒரு அம்மி குழவியைக் எடுத்து, தன் வயிற்றில் இடித்துக் கொண்டாள். அவள் கரு சிதைந்து, ரத்தம் கலந்த சதை கூறுகளாக சிதறின.

வியாசர் அந்தச் சதை கூறுகளை, நூற்றியொரு குடங்களில் இட, துரியோதனன் முதலான நூறு பேர்களும், துச்சலை என்ற ஒரு பெண்ணும் உருவாயினர். காந்தாரியின் இத்தகைய பொறாமை குணத்தின் காரணமாகவே, கவுரவர்களும் இயல் பிலேயே பொறாமை குணம் படைத்தோராக விளங்கி, பாண்டவர்களின் மேல் கொண்ட பொறா மையால் அழிந்தனர். நாம் யாரைக் கண்டு பொறாமைப்படுகிறோமோ, அவர்களுக்கு ஒன்றும் நேராது; பொறாமைப்பட்ட நமக்குத் தான் கேடு விளையும். எனவே, பொறா மையை மனதிலி ருந்து துரத்தி, நற் சிந்தனைகளை மனதில் வளர்த்துக் கொள்ளுங்கள். நடப்பவை, நல்லனதாகவே அமையும்.










# முருகன் திருத்தலங்களும் பலன்களும்

## சரவணபவ என்றால் கிடைக்கும் ஆறு பலன்கள்

“சரவணபவ’ என்னும் ஆறெழுத்து மந்திரம் மிகவும் சிறப்பானதாகும். இதனை மனமுருகி சொல்பவர்கள் செல்வம், கல்வி, முக்தி (பிறப்பற்ற நிலை), எதிரிகளை வெல்லுதல், ஆரோக்கியம், பயமின்றி இருத்தல் ஆகிய ஆறு பேறுகளையும் பெற்று மகிழ்வார்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது.

## முருகனும், வேங்கை மரமும்

முருகன் கோவில்களில் பெரும்பாலும் வேங்கைமரம் தலவிருட்சமாக இருக்கும். முருகன் வள்ளி திருமணத்தில் வேங்க மரம் முக்கிய இடம் பெறுகிறது. இம்மரம் தனிச்சிறப்பு உடையது. தெய்வீக அருள்பெற்ற மரம்.

முருகனருள் பெற்ற மரமல்லவா இம்மரத் துண்டுகளை நீரில் நனைய வைத்து அந்நீரை வெயிலில் காயவைத்து வெற்றிக்கு இடும் பொட்டு (திலகம்) செய்து வந்தார்கள் என்ற குறிப்பும் உண்டு. இது கெடுதல் விளைவிக்காது. இந்த நீரை குடித்தால் வலிமையான நோயற்ற உடல்நலம் உருவாகும். இம்மரம் பாதுகாப்பு கவசம் போன்றது.

## ஆறுமுகனை எங்கு வழிபட்டால் என்ன பலன்கள் கிடைக்கும்

திருப்பரங்குன்றம் நல்துணை வடிவு உல்லாசம்
திருச்செந்தூர் ஒளிவடிவு மறுபிறப்பின்மை
பழனி பழம் (திருவடிவு) யோகம்
சுவாமிமலை சொல்வடிவு இவ்வுலக சுகம்
திருத்தணி கலசநீர் வடிவு சல்லாபம்
பழமுதிர்ச்சோலை மர வடிவு விநோதம்

## ஆறுபடை முருகனை தரிசிப்பதன் பயன்

1. திருப்பரங்குன்றம்: இங்கு பரம்பொருளை வழிபட்டால் திருமணம் நடைபெறும்.
2. திருச்செந்தூர் (திருச்சரலைவாய்): இங்கு முருகப்பெருமானை கடலில் நீராடி பின் வழிபடுதல் நல்லது. தீராத பகை,தீராத வியாதி ஆகியன நீங்கும். மனம் தெளிவு பெறும்.
3. பழனி (திரு ஆவினன்குடி): ஞானப்பழமாக இருக்கின்ற முருகப்பெருமானை (பழனிட ஆண்டவரை) வழிபட்டால் தெளிந்த ஞானம் கிடைக்கும்.
4. சுவாமிமலை (திருஏரகம்): தந்தைக்கு உபதேசம் செய்த முருகப்பெருமானை இங்கு வழிபட்டால் ஞானம், சுகவாழ்வு, மகிழ்வு ஆகியன பெறலாம்.
5. திருத்தணிகை (குன்று தோறாடல்): குன்றிலே குடியிருக்கின்ற திருத்தணிகை (செருத்தணி முருகன்) முருகனை வழிபட்டால் மனதிலிருக்கும் கோபம் (சினம்) முழுமையாக நீங்கும்.
6. பழமுதிர்ச்சோலை (சோலைமலை): இங்குள்ள முருகனை வழிபட்டால் பொன், பொருள், வருமானம் பெருகும். அங்குள்ள சுனை (சிறு அருவி)யில் நீராடுதல் மிகவும் சிறப்பு.

# தீங்கு

# இறைவனது படைப்பின் ஒரு பாகமாக இருப்பது ஏன்?

பூஜ்ய குருதேவர் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் ஆற்றிய சொற்பொழிவில் அருளியதாவது:
ஸெல்ஃப்ரியலைசேஷன் ஃபெலோஷிப் ஆலயம், ஸான் டியா, கலிஃபோர்னியா, நவம்பர் 17, 1946.

“இறைவனுக்கு தீங்கைப்பற்றித் தெரியாது என சில‍ர் கூறுகின்றனர். ஏனெனில் இப்புவியில் இடையறாது நிகழ்ந்துகொண்டிருக்கும் கொள்ளைகள், கொலைகள், நோய்கள், வறுமை மற்றும் பிற பயங்கரமான சம்பவங்களை இறைவன் ஏன் அனுமதிக்கிறார் என அவர்களால் விளக்க முடியாது. இந்தத் துர்பாக்கியங்கள் நிச்சயமாக நமக்கு தீயவைதான்; ஆனால் அவை இறைவனுக்குத் தீயவையா? அப்படியெனில், இறைவன் ஏன் அத்தகைய தீங்கை அனுமதிக்க வேண்டும்? மேலும் எல்லாவற்றையும் ஒப்புயர்வற்று படைத்தவனான அவனிடமிருந்து தீங்கு உருவாக்கப்படவில்லையெனில், அது எங்கிருந்து வந்தது? பேராசையை படைத்தது யார்? வெறுப்பைப் படைத்தது யார்?

பொறாமையையும் கோபத்தையும் படைத்தது யார்? தீங்கிழைக்கும் பாக்டீரியாவை படைத்தது யார்? பாலுணர்வுத் தூண்டுதலையும் பேராசைத் தூண்டுதலையும் படைத்தது யார்? இவை மனிதர்களுடைய கண்டுபிடிப்பு அல்ல. அவை முதலில் உருவாக்கப்பட்டிருக்கவில்லையெனில், மனிதன் அவற்றை ஒருபோதும் அனுபவித்திருக்க முடியாது,

ஆகவே உண்மை என்னவெனில், நாம் தீங்கை உலகில் நிச்சயம் காண்கிறோம். மேலும், அது எங்கிருந்து வந்தது? இறைவனிடமிருந்து. தீங்கானது, நற்குணத்தை அறிந்துகொண்டு அனுபவிப்பதற்கு நம்மை ஏதுவாக்கும் வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. ஒரு படைப்பு இருக்கவேண்டுமெனில்,தீங்கு



இருக்கத்தான் வேண்டும். நீங்கள் ஒரு வெள்ளைப் பலகையின்மீது வெள்ளை சாக்கு கட்டியினால் ஒரு செய்தியை எழுதினால் யாரும் அதைப் பார்க்க முடியாது. எனவே தீங்கு எனும் கரும்பலகையின்றி உலகிலுள்ள நல்ல விஷயங்கள் பெரிதாக்கப்பட முடியவே முடியாது.

## இறைவனை உணர்பவனுக்குத் தீங்கில்லை

குருதேவர் அருளுகிறார்: “பரமசந்தோஷத்திற்கான வழி விஞ்ஞானியினாலோ அல்லது லோகாயத மனம் உடைய மக்களாலோ கண்டறியப்பட முடியாது. மாறாக, “இந்த எல்லாப் பிரபஞ்சத்திரைப்படங்களையும் காண்பித்துக்கொண்டிருக்கின்ற எல்லையற்றவனின் அறைக்குள் திரும்பிச் செல். பிறகு நீ இறைவனுடைய லீலையான அவனது படைப்பைப் பற்றி மனக்கலக்கம் அடையமாட்டாய்” எனக் கூறுகின்ற மகான்களைப் பின்பற்றுபவர்களால் காணமுடியும்.

மக்களிடத்தில் எனக்குள்ள ஒரே அக்கறை அவர்களுக்கு உதவி செய்வதுதான். நான் உயிருடன் இருக்கும் வரை இந்த மாயைத்திரைப்படத்திலிருந்து ஒதுங்கிச்செல்ல மற்றவர்களுக்கு உதவுவதற்கு நான் முயற்சி செய்வேன். நீங்கள் அதன் ஒரு பகுதியாக இருந்து அனுபவிப்பதால் துன்புறுகிறீர்கள். நீங்கள் ஒதுங்கி நின்று அதை கவனிக்க வேண்டும். அப்பொழுது நீங்கள் துன்புறமாட்டீர்கள். நீங்கள் ஒரு பார்வையாளராக இருந்தால், நீங்கள் இந்த நாடகத்தை மகிழ்ந்து அனுபவிக்கலாம். இதைத்தான் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இறைவனுக்கு இது ஒரு திரைப்படம் மட்டுமே, மேலும் நீங்கள் அவனிடம் திரும்பும்பொழுது உங்களுக்கும் அது ஒரு திரைப்படக்காட்சியே.”

குருதேவர் மேலும் தொடர்கிறார்: “நான் உங்களுக்கு ஒரு சிறிய கதை கூறுகிறேன். ஓர் அரசன் உறக்கத்திலாழ்ந்தபொழுது அவன் தன்னை ஒரு பிச்சைக்காரனாக கனவு கண்டான். அவனது உறக்கத்தில் சிறிது உணர்விற்காக காசில்லாமல் அவன் அழுது கொண்டிருந்தான், இறுதியாக அரசி அவனை எழுப்பி, கூறினாள், ’’உங்களுக்கு என்ன ஆயிற்று உங்களுடைய கருவூலம் தங்கத்தால் நிறைந்துள்ளது, இருப்பினும் நீங்கள் காசுக்காக அழுது கொண்டிருக்கிறீர்களே”

பிறகு அரசன் கூறினான், ”ஓ என்ன மடத்தனம் நான் ஒரு பிச்சைக்காரன் எனவும் காசே இல்லாததால் பட்டினியாக இருந்தேன் எனவும் எண்ணினேன்’’.

தான் ஓர் அழியும் மனிதன், மற்றும் நோய், துயரம், தொல்லைகள், இதயம் உடைவது போன்ற வேதனைகள் ஆகிய எல்லா விதமான திகிலை எழுப்பும் தீங்குகளுக்கு ஆளாகின்றவன் என கனவு கண்டுகொண்டிருக்கும் ஒவ் வோர் ஆன்மாவினுடைய மாயையும் இத்தகையது தான். இந்த திகில் கனவிலிருந்து தப்பிப்பதற்கான ஒரே வழி இறைவனுடன் அதிக பற்று கொண்டிருப்பவராகவும் இந்த உலகத்தின் கனவு உருவங்களுடன் குறைவாக பற்று கொண்டிருப்பவராகவும் மாறுவதுதான், நீங்கள் தவறான பொருட்களின்மீது உங்கள் கவனத்தை வைத்திருப்பதால்தான் துயருறுகிறீர்கள். உங்கள் இதயத்தை மனிதனுக்கோ அல்லது மதுவிற்கோ அல்லது பேராசைக்கோ அல்லது போதைப்பொருட்களுக்கோ கொடுத்தால் நீங்கள் துயரடைவீர்கள். உங்களுடைய இதயம் உடைந்துவிடும். நீங்கள் உங்கள் இதயத்தை இறைவனிடம் இருத்த வேண்டும். நீங்கள் அவனில் அமைதியை அதிகமாகத் தேடத்தேட உங்களுடைய கவலைகளையும் துயரங்களையும் அந்த அமைதி விழுங்கிவிடும்.

இவ்வுலகத்தில் தீங்குகளுக்குஉங்களையே மிக எளிதில் ஆளாகக் கூடியவாறுஅனுமதித்து விட்டதால்தான் நீங்கள் துயருறுகி றீர்கள்.

நீங்கள் ஆன்மீக ரீதியாக உறுதியாக வும் வலிமையாகவும் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள். ஆனால் அகத்தே கூறுங்கள், ”இறைவா, நான் உந்தன் குழந்தை, உந்தன் பிரதிபிம்பத்தில் ஆக்கப்பட்டுள்ளேன். எனக்கு எதுவும் தேவையில்லை, உன்னைத்தவிர”’. இந்த கொள்கையை பின்பற்றும் பக்தன், இந்த ஞானத்தை எய்துகிறவர், தனக்கு இந்த உலகத்தில் தீங்கே இல்லை என்பதைக்காண்பான்”.

குருதேவர் கூறுவதைப் பார்க்கையில் இறைவன் ஒரு நன்மையைப் படைக்கிறான் என்றால், அதற்குச் சமமாக ஒரு தீமையையும் படைக்கிறான், தீமையே மாயையாகிறது. நன்மை நன்மையாகவே எப்பொழுதும் மாறாமலிருப்பதற்காகத்தான் தீமையையும் சேர்த்து நன்மையுடன்

41
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

படைக்கிறான். ஏன் அந்த தீமையைப் படைக்கிறான் இறைவன்? அந்தத் தீமை யிலிருந்து நம்மை, நிறைய பாடங்களைக் கற்றுக்கொள்வதற்காகவும், நன்மை கலைந்து போகாமல் திடமாக இருப்பதற்காகவும் இறை வன் பாதுகாக்கிறான். அதற்காக அவன் துணைபுரிகிறான் என்றுதான் கூறவேண்டும்.

இவ்வாறிருக்கையில் இறைவன் ஒரு மகானை உருவாக்குகிறார் என்று வைத்துக்கொள்வோம், படைக்கும்போதே, அதாவது அந்த ஆத்மா பூமியில் பிறக்கும் போதே மகானாகப் பிறக்க வில்லை. பிறக்கும்போதே மகானாக பிறப்பது அரிது. பின்னர் அந்த மனிதன் உலகத்தில் வாழ்ந்துகொண்டே இறைவனின் துணையோடும் மாயையின் துணையோடும் தன்னை உயர் நிலைக்கு கொண்டு செல்கிறான். அது சர்வ சாதாரணமல்ல. எளிதில் செல்ல முடியாது. அதற்கு யாராவது உடனிருந்து தூண்டிவிடவேண்டும். அதற்கு மிக முக்கியமானவர்கள் இறைவன் மற்றும் தீங்கிழைக்கின்றவர்களும்தான், தீங்குதான் மாயை. விளக்கு நன்றாக சுடர் விட்டெரிய வேண்டுமென்றால், திரியை தூண்டிவிடவேண்டும், மகானுக்கும் சராசரி மனிதனுக்கும் இருப்பது மாறான கருத்துடைய மனம், சராசரி மனிதன் இறைவனைத் தேடமாட்டான். உலகமும் உலகப்பொருட்களும்தான் அவனுக்கு இலக்கு. இறைவனை பேரிலக்காகக் கொண்ட வர்கள்தான் அவனைத்தேடுவர். இறைவனைத் தேடாதவர்கள், தேடுபவர்களைத் தடுப்பதற்கும் அவர்களை கீழ்நிலைக்குக் கொண்டு செல்வதற்கும் வழிகோலுவர். மகானாக மாறப் போகின்ற அந்த மனிதனை உத்தாரணம் (முன்னேற வைப்பதற்காக) செய்வதற் காக அவனுக்குச் சுற்றிலுமிருப்பவர்கள் தீங்கு விளைவிப் பவர்களாகத்தான் இருப்பர். அவ்வாறானவர்களை இறைவன் படைத்தால்தான் மகானாக மாறப்போகின்ற ஆத்மாவிற்குச் சுற்றிலுமிருக்கும் அல்லது உடனிருக்கும் தீயவர்கள் விளைவிக்கும் ஒவ்வொரு தீங்கும், அந்த ஆத்மா இறைவனை நோச்சிச் செல்வதற்கான ஒவ்வொரு படிக்கல்லாக மாறிவிடும். அதனால் அதைத் தீங்கென்றும் தீங்கிழைப்பவர்கள் என்றும் கூறமுடியாது, அதுவும் நல்லதேயாகும். அது இறைவனின் படைப்பு. இறைவனின் படைப்பு எதுவுமே வீணாகாது. எல்லாமே நல்லவைதான்.

ஏனென்றால் ஓர் ஆத்மாவை ‘மகான்’ ஆக மாற்றுவதென்பதே இறைவனின் குறிக்கோளா கும். அதற்கு உதவிபுரியத்தான் தீங்கு இழைப்ப வர்களை உடன் அனுப்பிவைக்கிறான் இறைவன். இது மிகவும் சரியானதும் உண்மையானதுமாகும். ஓர் ஆத்மா உயர் உணர்வு நிலைக்குச் (இறை அனுபூதி பெறுவதற்கு) செல்ல உதவியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் இறைவன் தன் அருட்கரம் நீட்டி அணைத்து தன்னுடன் இணைத்துக்கொள்வான். எனவே தீங்கு செய் பவர்களை வெறுக்கக்கூடாது, இறைவனின் முன்னால் நல்லவர்களும் தீயவர்களும் சமம். இந்த ஞானத்தை இறைவனே அருள்கிறான்.

தீங்கிழைக்கின்றவர்களும் இறைவனிடத்தி லிருந்து வந்தவர்கள்தானே! இம்மாதிரியான தீமையைநன்மையுடன்இணைத்துபடைத்தால்தான் நன்மை எப்பொழுதும் மாறாமல் நன்மையாகவே இருப்பதுடன் தீங்கிழைக்கின்றவர்களையும் தன் னுடன் இணைத்துக்கொள்வதென்ற, அதாவது ‘ஒரு கல்லால் இரண்டு மாங்காய் அடிப்பது’ போன்ற இறைவன் தன்னுடைய் நோக்கத்தையும் நிறைவேற்றுகிறான். இது மிகப்பெரிய விஷயம். இறைவனிடத்திலிருந்து வந்த சிறு ஒளிதான் நாமெல்லாம் அவனுடைய சூத்திரத்தையும் புத்தியையும் யாராலும் அளவிடமுடியாது. தீமை கள் உடனிருந்தால்தான் நன்மை வளரமுடியும்.

இறைவனைப்பற்றி அறியாதவர்கள் அவனை பல விதத்திலும் திட்டுவார்கள். ஆனால் அது அவ்வாறு திட்டுவது சரியல்ல என்பதை பூஜ்ய குருதேவர் போதித்துள்ளார். தீமை (மாயை) இல்லையேல் உலகமே இல்லை. இறைவனை உணர்ந்தால் எல்லாவற்றையும் இறைவன் நமக்கு உணர்த்துவான். இறைவனை உண்மையில் உணர்ந்தால் பிறர்மேல் குறை கூறமாட்டார்கள். அதே சமயம் நடப்பதனைத்தும் இறைவனால் மட்டும்தான் நடக்கிறது என்பதையும் உணர முடியும். அதையும் இறைவனே உணர்த்துவான்.

நல்லவர்களுக்காக, தன்னை நேசிப்பவர் களுக்காக இறைவன் இவ்வுலகில் பல உருவத் திலும் வந்து கொண்டிருக்கிறான். அது பிறருக்குத் தெரியாது. அது அவனுடைய பக்தர்களுக்கான சோதனைகளில் ஒன்று, அதற்கான ஒரு சிறு உதாரணத்தைக் கூறவிழைகின்றேன்.

பரஸ்பரம் மிருந்த அன்புடைய இரு நண்பர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவன் இறைவனிடத்தில் தீவிர பத்தியுடையவன் . அதாவது அவன் ஸ்ரீ கிருஷ்ணபக்தன். மற்றொருவன் பக்தியைப் பற்றி தெரியாதவன். பக்தியுடையவன், தினமும் கிருஷ்ண பரமாத்மாவை நேரில் பார்த்துப் பேசுவான், அதனால் அவன் ஆனந்தமாக இருந்தான். அதை அவன் தன்னுடைய நண்பனி டத்தில் கூறுவான். அவ்வாறிருக்கையில், ஒரு நாள் இறைவனிடத்தில் பக்தியில்லாத நண்பன் பக்தியுள்ள நண்பனிடத்தில். ”நீ மட்டும் தினமும் கிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்ததாகக் கூறுகிறாயே! ஒரு நாள் உன் கிருஷ்ண பரமாத்மாவை எனக்குக் காட்டமாட்டாயா? நானும் அவரைப் பார்க்கலாமல்லவா!” என்று கேட்டான்.

அதற்கு அந்த நண்பன் “ஓ பார்க்கலாமே! நாளைக்கு அவர் வரும்போது நீயும் பார்க்கலாம்,” என்று இறைபக்தன் பதிலளித்தான். மறுநாள் குறிப்பிட்ட நேரத்தில் இருவரும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் வருகையை எதிர் பார்த்துக் காத்திருந்தனர், ஆனால் கிருஷ்ண பரமாத்மா வரவேயில்லை. அந்தத் தருணத்தில் ஒரு பன்றி அங்கே வந்தது. பன்றியை அங்கி ருந்தவர்களெல்லாம் சேர்ந்து, இரு நண்பர்களும் பார்த்துக்கொண்டிருக்கவே, பிரம்பால் அடித்துத் துரத்தினர். அதன் பின்னர் இரு நண்பர்களும் நிராசையுடன் வீடு திரும்பினர். ஸ்ரீ கிருஷ்ணன் தன் பக்தனைக் காண இரவில் வந்தான். அப்பொழுது, “கிருஷ்ணா! நாங்கள் இருவரும் உனக்காகக் காத்திருந்த நேரத்தில் நீ ஏன் வரவில்லை?; நானும் என் நண்பனும் நீ வருவாய் என்று காத்திருந்தோம், ஆனால் நீ வரவில்லை. எனவே உன்னைப் பார்க்க முடியவில்லை” என்றான். “நான் வந்தேன்; நீங்கள் தான் என்னைப்பார்க்கவில்லை” என்றான் கிருஷ்ணன். “எப்பொழுது வந்தாய்?” என வினவினான், கிருஷ்ண பக்தன். ”நான் வந்தபோது என்னை அனைவரும் சேர்ந்து பிரம்பால் அடித்துத் துரத் தினர். அப்பொழுது நீங்களும் அங்குதான் இருந்தீர்கள்,” என்று கூறி தன் முதுகை மறைத்திருந்த அங்கவஸ்திரத்தை மெதுவாக விலக்கிக்காட்டினான் கண்ணன். அப்பொழுது முதுகில் பிரம்பால் அடித்ததால் ஏற்பட்ட காயத்தைக் கண்டு பக்தன் வியப்படைந்து, ”நீ பன்றியாக உருமாறி வந்தாயா? பிரம்பால் அடித்த காயம் இருக்கிறதே என்று கேட்ட போது “ஆமாம்” என்று கிருஷ்ணன் பதிலளித்தான்.

யாருடைய இதயத்தில் இறைவனுக்கான இடம் உள்ளதோ, யாருடைய இதயம் இறை அன்பால் நிறைந்துள்ளதோ அந்த இதயத்தில் இறைவன் குடியிருப்பான். என்றென்றும் இருப்பான். அது மட்டுமின்றி அப்படிப்பட்டவர்களை தன்னுடன் சேர்த்துக்கொள்வதற்காக தன்னு டைய படைப்பாகிய தீமையை (மாயையை) பயன்படுத்திக்கொள்வான். இறைவன் ஒரு புரியாத புதிர். பிறரை சோதிப்பதற்கென்றே உருமாறுவான், நல்லது இருந்தால் தீயதும் இருக்கும். இல்லையேல் இந்த உலகம் இல்லை. இவ்வுலகில் இறைவன் மட்டும்தான் என்றும் உள்ளது; அவன் முக்கியமானவன்; எங்கும் நிறைந்தவன்; சாசுவதமானவன் என்பது இறைவனின் படைப்புச் செயலிலிருந்து தெள்ளத்தெளிவாகத் தெரியவருகிறது. மாயை யும் இறைவனே! தீயதும் இறைவனே! நல்ல வனும் இறைவனே! வில்லனாக வருவதும் இறைவனே! அனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்பொழுது இறைவன் தான், இறைவன் மட்டும்தான் மிஞ்சும், அவனால் படைக்கப்பட்ட நமக்கெல்லாம் அவன் மட்டும் தான் நண்பன். எல்லாமாக இருக்கும் இவ்வுலகும் அவனே! எல்லாம் இறைவனே!

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

# கோவிலில் வழிபாட்டின் போது கவனிக்கவேண்டியவை

நம்மில் பெரும்பாலானோர் குறைகளை கொட்டுவதற்கும், தேவைகளை கேட்பதற்குமே திருக்கோயில்களை தேடிச் செல்கிறோம். மிகச் சிலரே நம்மை காத்து ரட்சிக்கும் இறைவனுக்கு நன்றி சொல்லவும், அமைதி தேடவும் கோயில்களுக்கு செல்கிறோம். திருக்கோயில்களை எப்படி மதிக்க வேண்டும்? அங்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும் ஆகிய அடிப்படைகளை பலரும் மறந்து விட்டோம்.

நம்முடைய திருக்கோயில்கள் பெரும் சக்திகளை உள்ளடக்கியது. யோகியரும் ஞானியரும் பல அற்புத சக்திகளை திருக்கோயில்களில் உணர்ந்து உள்ளனர், நமக்கும் உணர்த்தியுள்ளனர். பழம் பெருமையும் அளவிடமுடியாத சக்தியும் கொண்ட திருக்கோயில்களில் செல்போன் கேமிராவில் செல்பி எடுத்துக் கொள்வதும், அநாகரிக ஆடைகள் அணிந்து செல்வதும், கூச்சலிட்டு ஆரவாரம் செய்வதும், பக்தியில் கவனமின்றி செல்போனில் பேசித் திரிவதும் பாவத்தையே நம்மிடம் சேர்க்கும்.

திருக்கோயில்கள் நம் வாழ்க்கையை மேம்படுத்தும் திருத்தலங்கள். இறைவனின் இல்லம் அது. எனவே கோயிலுக்கு செல்லும் முன் குளித்து, சுத்தமாக செல்ல வேண்டும். கோயிலுக்கு வெறுங்கையுடன் செல்லாமல் கடவுளுக்குப் படைக்க நம்மால் முடிந்த பூ, பழம் எதையாவது வாங்கிச் செல்வது உத்தமம். குறிப்பாக அடுத்தவர் கவனத்தை சிதறச் செய்யும் ஆடைகளை அணியாமல், நேர்த்தியான ஆடைகளை அணிந்து செல்ல வேண்டும்.

❖ சிவன் கோயிலுக்கு வில்வத்தையும், பெருமாள் கோவிலுக்கு துளசியை வாங்கி சென்று அர்ச்சனைக்கு கொடுக்கலாம்.

❖ கோயிலுக்குள் உள்ளே செல்லும் போது முதலில் கோயில் கோபுரத்தை வணங்கி விட்டு செல்ல வேண்டும்.

❖ விநாயகர் சன்னதியில் தலையில் மூன்று முறை கொட்டிக் கொண்டு, மூன்று தோப்புக்கரணம் போட வேண்டும்.அப்பொழுது நன்றாக உட்கார்ந்து எழ வேண்டும்.சும்மா போலியாக தோப்புகரணம் போட கூடாது.

❖ விநாயகரை ஒரு தரமும், சூரியனை 2 தரமும், அம்பாளையும், விஷ்ணுவையும் 4 தரமும், ஆஞ்சநேயரை 5 முறையும் பிரதட்சணம் செய்ய வேண்டும்.

❖ கோயிலுக்கு உள்ளே சென்று தீபம் ஏற்றும் போது முதலில் சுத்தமான என்னையை விட்டு அதன் பின்பு தான் திரியை போட்டு தீபம் ஏற்ற வேண்டும்.

❖ மூலவருக்கு அபிஷேகம் நடந்து கொண்டிருக்கும் போது கோயில் பிரகாரத்தைச் சுற்றக்கூடாது. அபிஷேகத்தை கண்டால் அலங்காரமும் பார்க்க வேண்டும்.

❖ இறைவனுக்கு நமஸ்காரம் செய்யும் போது மேற்கு அல்லது தெற்கில் கால் நீட்டல் வேண்டும். வடக்கிலும், கிழக்கிலும் கால் நீட்டுதல் கூடாது.

❖ வேண்டுதல்களையும் பிரார்த்தனை களையும் கொடிமரத்தின் அருகே நின்று கேட்க வேண்டும்.

❖ திருக்கோயிலில் இருக்கும் நேரமாவது சிவ நாமமும் நாரயண நாமமும் தவிர நமது புத்தியில் மனதில் வேறு எந்த சிந்தனையும் இருக்கக்கூடாது.

❖ ஆலயத்திற்குள் எந்த தனி மனிதரையும் வணங்கக் கூடாது. அப்படி வணங்கினால், கும்பிட்டவரின் பாவம் எதிரில் உள்ளவரை சேரும்.



❖ சனிபகவானை நேருக்கு நேர் நின்று கும்பிடக்கூடாது. சனிபகவானுக்கு எள்ளுபொட்டலம் தீபம் ஏற்றினால் மிக கொடிய பாவமும், கஷ்டமும் வந்து கொண்டே இருக்கும்.

❖ கோவிலிலிருந்து, பிரசாதம் தவிர வேறெதையும் எடுத்துச் செல்லக் கூடாது.

❖ சண்டிகேசுவரரின் சன்னதியில் நூலை கிழித்துக் போடுவது, கைதட்டுவது போன்றவை செய்தல் கூடாது. சிவ தியானம் பூர்த்தி செய்யச் சொல்லி அவரிடம் வேண்டிவிட்டு, சிவனுடைய அருளைத் தவிர, வேறெதையும் கொண்டு செல்லவில்லை என்று சண்டிகேசுவரரிடம் தெரிவித்துவிட்டு செல்ல வேண்டும்.

❖ சிவன் கோவிலில் காலபைரவரையும், பெருமாள் கோவிலில், சக்கரத் தாழ்வாரையும் வழிபட, நம்மை செய்வினை தோஷங்கள் அண்டாது.

இந்த குறிப்புகளை நெஞ்சில் நிறுத்தி பக்தி சிரத்தையுடன், திருக்கோயில்கள் தெய்வ சன்னதி என்பதை உள்ளப்பூர்வமாக உணர்ந்து வணங்கிட நம் பாவங்கள் தீரும். நோய் நொடி அகலும். வீட்டில் மகாலட்சுமி அருள் நிலைக்கும்.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# துறவிகளின் ஞானம்

குருதேவா.. மிக நல்ல குருநாதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று வினவினான் சீடன். நான் ஒரு பல்கலைக்கழகம். நானே ஒரு நூல் நிலையம் என்றார் தத்தாத்ரேயர்.

இத்தகையோரிடம் சீடர்களாய் இருப்பவர்களுக்கே காழ்ப்புணர்ச்சி ஏற்படாது என்று உபதேசித்தார் குரு. காழ்ப்புணர்ச்சி உதயமாகும் வண்ணம் எந்த குருநாதர்களும் பேசலமா பேசக்கூடாதா? என்று கேட்டான் சீடன், குரு கூடாது என பதிலளித்தார்.

காட்டில் தங்கிய சீடன் ஒருவனுக்கு கொசுவினால் பெருங்காய்ச்சல் கண்டு உடல் தேறியது. அவனை வைத்தே தத்தர் பேச எண்ணினார். அதற்கு முன் சீடன் குருவே ஆச்சாரியன் அல்லது ஆச்சாரியர் என்றால் பொருள் என்ன? என்றான்.

கடவுளின் கொள்கை என்ன? உலகிலுள்ள அனைவரின் உள்ளங்களிலும் அவனே வாழ வேண்டும். இதுவே கடவுளின் கொள்கை. இக்கொள்கையைத் தனது கொள்கையாக ஏற்று அனைவரின் உள்ளங்களிலும் வாழ்வான் ஒருவன்.

அவனுக்கே ஆச்சாரியன் என்று பெயர் என்றார் குரு. சீடர்கள் காட்டில் திருப்தி அடைந்தனர். அனைவரின் உள்ளத்திலும் வாழ எண்ணும் ஆச்சாரியர்கள் காழ்ப்பு உணர்ச்சியைக் கொள்ள இயலாது. இவ்வுண்மையே தத்தனின் தெளிவு என்க.

கடவுளால் ஆசாரியர்கள் உருவாவது உண்டு. அதுபோல் கொள் கையை ஏற்பதாலும் ஆசாரியர்கள் கணக்கின்றி உருவாகலாம்.



ஆதிசங்கரரின்.."கடவுளும் நானும் ஒன்றே.. இரண்டல்ல.." என்ற அத்வைதம் அவரால் நிலை நிறுத்தப்பட்டது. சங்கரன் என்ற சிவனும் நானும் ஒன்று என்ற கொள்கையால் ஆதி சங்கரர்.. சங்கராச்சாரியரானார்.

இது போன்று அக்கொள்கையை ஏற்ற எண்ணற்ற சந்நியாசிகள் பல சங்கராச்சாரியார்களாக உலவலாம். கொள்கை வழி பொதுப் பட்டமே சங்கர ஆச்சாரிய பட்டம். துறவிகளின் தனிப்பெயர் அஞ் ஞானம். அனுபவப் பட்டப் பெயர் சாதனையாளர்களின் பொதுச் சொத்து.

இதனால் தனிப் பெயரோடு ஒட்டிக் கொண்டிருக்கும் காழ்ப் புணர்ச்சியை நீக்கி பொதுப் பெயருடன் கூடிய அத்வைத ஞானத்தைப் பெறுவதே துறவிகளின் ஞானம் என உபதேசித்தார் தத்தர்.

காஞ்சி சங்கரர்..சங்கராச்சாரியாரா? என வினவினார் பலர்! கடவுளின் பெருமையே துறவியை உயர்த்தும். கட்டிடத்தின் பெருமை கட்டிடத்தையே உயர்த்தும். முன்னது பக்தியைப் பரப்பும். கட்டிடத்தின் பெருமை காழ்ப்புணர்ச்சியை வளர்க்கும். எது நாட்டிற்குத் தேவை என்று சீடன் முடிவெடுக்கும்படி குரு நடந்து கொள்ளக்கூடாது. வெறும் காய்ச்சல் ஓடி விடும்.

ஆண்டிக் காய்ச்சல் மரணம் வரை ஓயாது என்றார் தத்தாத்ரேயர். "காய்ச்சலில்லா குருவே ஆச்சாரியன்" என்பதை சீடர்கள் உணர்ந்தனர்.

– ஞானச்சேரி ஞானிகள் –
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து
தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## ஞானிகளின் பொன்மொழிகள்...

- யார் எவர் என்று பாராமல் எவராய் இருந்தாலும் ஒருவர் ஒரு நன்மையை உலகத்திற்கு உற்பத்தி செய்துவந்தால் அந்த நன்மை ஒரு நாய்க் குடையைப் போன்றது. பிறரது நன்மையில் நாம் தங்கி உலக வாழ்க்கை நடத்தமுடியுமா? மனிதா நீ சிந்தி. உனது குருநாதன் புத்தனைப் பார்த்து நான் எவ்வளவோ தெரிந்து கொண்டேன். அளவிலா மகிழ்ச்சிகொண்டேன். நீயும் அப்படியே சூல்பெறு கருப்பெறு.
- கருப்பெறாத தாய்க்கு சந்ததி இல்லை. அதுபோல கருப்பெறாத மனிதர்க்கு சிந்தனை இல்லை. நீ உனது சிந்தனைக்கருவை எங்கோ முட்புதரில் எப்படியோ தொலைத்துவிட்டாய். ஒவ்வொரு நாளும் இன்ப துன்பங்களைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டு வாழுகிறாய். பயனே இல்லை. இப்படியே கருப்பெறாமல் இருந்தால் மனிதர்கள் அனைவரும் ஜீவமரணப் போராட்டத்துக்கு மத்தியில் வாழ்க்கையை இழுத்துச் செல்லுவார்கள்.
- எனது எழுத்துக்கள் உன்னை ஆட்டிப்படைக்கின்றனவா என்று பார். ஆட்டிப்படைக்கும்படியாக நாம் இருக்கக்கூடாது. நீ உன்னை அப்படி வைத்துக் கொள்ளவேண்டும். ஒருவரை ஒருவர் கண்டு பயப்படுவது என்பது சரியல்ல. தேக அபிமானம், மன அபிமானம் இவைகளை உலகத்தோடு இணைத்து சிந்திக்காதே. எவரும் ஆட்டிப்படைக்க முடியாத உயிரை தேவையற்ற பொருள்கள் ஆட்டிப்படைத்துவிடும். இதற்கு இடம் கொடுக்காமல் இருப்பதே நல்ல வழி.
- தானாக இயங்கமுடியாத பொம்மைகளை நுண்ணிய நூல்களைக் கட்டி தனது இஷ்டப்படி இழு க்கிறான். இந்த பொம்மலாட்டத்தை கவனித்தேன். எப்பொழுதும் நாமாகவே இயங்கவேண்டும். பொம்மலாட்ட இயக்கத்திற்கு மனித வர்க்கத்தில் இடமே இல்லை. ஒரு கருத்தும் உன்னை ஆட்டிப்படைக்கவில்லை என்றால் இயங்குகின்ற வரை நீயாக உனது கைகால்களை வீசி ஓயாமல் நட. இரண்டாவது ரோஜா இதழ் கீழே உதிர்ந்து விழுந்தது. நீ என்ன எண்ணுகிறாயோ என்னமோ தெரியவில்லை? வாட் டு யூ மீன்? நீ ஒன்றும் எண்ணவில்லை என்றால் உனக்கு ஒரு பொன்மொழியும் தேவையில்லை.

# பெண்கள் பூ வைப்பதன் ரகசியம்

## பூவைக்குபோது அவசியம் கடைபிடிக்கவேண்டிய முறைகளும்



எப்போது பூ வாங்கினாலும் அதனை தெய்வத்திற்குச் சூட்டிய பிறகு தலையில் சூட வேண்டும்.

ஒரு முறை பயன்படுத்தியதை பூக்களை மீண்டும் வாங்குதல் தவறு. இவைகளை வாங்கி உபயோகித்தால் வயிற்று வலி வரும்.

அந்தி சாயும் போது வாங்கக் கூடாது.

நெற்றியில் குங்குமம் இட்ட சுமங்கலிகளிடம் தான் பூ வாங்கினால் மிகவும் நல்லது.

பெண்கள் பூவினை ஒற்றை மலராகத் தலையில் வைக்க கூடாது. இதனால் திருமணத் தடங்கல்கள் அதிகம் வரும்.

பூக்களைக் கொண்டையில் குத்தி செருகுதல் தவறு. நடுவகிடு எடுத்து வாரி, ஆள்காட்டி விரலாலும், கட்டை விரலாலும் முடியை தூக்கி, கட்டை விரலாலும், மோதிர விரலாலும் பூ வைக்க வேண்டும்.

இரு பக்கமும் பூ தொங்க கூடாது. தலையில் பூ செண்டாக இருக்க வேண்டும்.

காதின் நுனியிலிருந்து அடிவரை இடைப்பட்ட இடைவெளி தூரத்தில் தலையில் பின்பக்கம் பூ வைக்க வேண்டும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் வாசனை அற்ற பூவை வாசனை உள்ள பூவோடு சேர்க்கக் கூடாது. இதனால் சாபம் தான் வருகிறது. வாசனை இல்லாத பூவை ஒரு போதும் தெய்வத்திற்கோ, கோயிலுக்கோ, இல்லத்திற்கோ பயன் படுத்த கூடாது. உதாரணமாய் காட்டு மல்லி, காகிதப் பூக்கள் கூடாது.

காட்டுமல்லி எனப்படும் பூவை வாசனையான மல்லியுடன் சேர்த்து வைத்தால், கெட்ட கனவுகள் வரும்! காட்டு மிருகங்கள் கனவில் பயமுறுத்தும். காகிதப் பூக்கள் வைத்தால் மனதில் சஞ்சலமிருக்கும்.

யாராக இருந்தாலும் பூவினை வைத்துக் கொண்டு நடக்கும்போது பூ ஆடி ஆடி பின் தலையைத் தொடக் கூடாது. இவ்வாறு நடந்தால் பின்னர் மணவாழ்க்கையில் ஒற்றுமை இல்லாமல் சண்டையிட்டுக் கொண்டே இருப்பர். பூவினை ஆடாமல் வைக்க வேண்டும்.

பூவினை ஜடை முழுவதும் சுற்றி அலங்கரிப்பது வளைகாப்பு விழாவிற்கு மட்டும்தான் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தனால் குறைப்பிரசவம் ஆகாது. மற்ற நேரங்களில் செய்தல் தவறு.

பூவினை ஜடை நுனியில் வைப்பது தவறு. இதனால் பூ ஆடி ஆடிப் பின் பக்கத்தில் இடிக்கும். இதனால் வரும் சாபம் என்ன ? இவள் கணவனை இழப்பாள். ஒரு பக்கத்தில் சுமங்கலிப் பிரார்த்தனை, பூஜை. மறுபக்கத்தில் நேர்மாறாக பூச்சூடுதல். இதனால்தான் என்ன பலனை எதிர்பார்த்தாலும் நடப்பதில்லை.

முடி வளர்வதற்கு சாங்க்யா வித்தகி என்ற தேவதையின் அருள் வேண்டும். ஆனால் அந்த தேவதை மணமுள்ள மலரை மணமில்லாத மலரோடு தலையில் வைத்தால் சாபம் கொடுக்கும். அதனால் தலைமுடி கொட்டும்.

புஷ்பத்தை தலையில் வைக்கும்போது இரண்டு பக்கங்களில் மட்டும் வைக்கக் கூடாது. சூரிய பிறை சந்திர பிறை எனப்படும் இவ்வகை அலங்காரம் திருமணத்தின்போது மட்டும் மணமகளுக்குச் செய்யலாம். மற்ற நாட்களில் கிடையாது.

எப்பொழுதும் பெண்கள் காதினை மூடும்படி தலைமுடியை வாரக் கூடாது. இது ஆரோக்யத்தைக் கெடுக்கும்.

பின்னலை முன்பக்கம் போடக் கூடாது. எக்காரணத்தாலும் பின்னல் முன்பக்கம் வரவே கூடாது. பெரியோர்களைக் குனிந்து நமஸ்கரிக்கும்போது தலைப் பின்னல் முன்பு வந்து விழும். இது தவறு. இவ்வாறு வராமல் இருப்பதற்காகத்தான் பின்னலை உள்ளே விட்டு முந்தானையை இழுத்து இருப்பர். இதனால் நமஸ்கரிக்கும்போது பின்னல் பக்கவாட்டிலோ உச்சி நெற்றியிலோ வந்து விழாது.

கணவன் முன்னிலையில் அல்லது தெய்வப் படத்திற்கு முன்னால் அல்லது வயதான சுமங்கலியின் முன்னால்தான் தலையில் பூ வைக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் மாதவிடாய் நோய் வரும்.

– செல்வம் மோஹி

# “ஆ(ம)ஹா பாரதம்”

அந்தணர் கச்யபர் செய்ததைக் கண்டு வியப் படைத்த தக்ஷகன் ஒரு நிமிடம் வாய டைத்து போய் நின்றான். மறுநிமிடம் அதைக் காட்டிக் கொள்ளாதது போல் அவரைப் புகழத் துவங்கினான். “அந்தணரே! உங்களைப் போன் றோரிடம் இத்தகைய திறமை இருப்பது ஒன்றும் ஆச்சர்யமில்லை. ஆயினும், நீங்கள் எந்த காரணத்திற்காக மன்னனை பிழைக்க வைக்க விரும்புகிறீர்களோ அதை என்னிடம் தெரிவித்தால் அந்த விருப்பத்தை நானே நிறைவேற்றி வைக்கிறேன் சொல்லுங்கள். மேலும் மன்னனின் ஆயுட்காலம் முடியப்போகிறது. அதன் பொருட்டே இந்த சாபம். எனவே நீங்கள் இந்த எண்ணத்தை விட்டு விருப்பத்தை தெரிவிக்கவும்” என்றான்.

கச்யபரும் சற்று யோசித்தார். தீர்க்கதரிசனமும் கொண்டவராதலால் நடக்கவிருப்பதை அறிந்தார். பின் “தக்ஷகா ! நான் மன்னரிடம் பணம் பெற் றுக் கொள்ளவே விரும்புகிறேன். அதை நீயே தருவாய் என்றால் அதைப் பெற்றுக் கொண்டு நான் திரும்பி விடுகிறேன்” என்றார்.

தக்ஷகனும் வேண்டிய செல்வத்தை கச்ய பருக்குத் தந்து அவரை திருப்தியுடன் அனுப்பி வைத்துவிட்டு. ஹஸ்தினாபுரத்தை வந்து அடைந்தான். மன்னனை காண முற் பட்ட போது, அவரை மந்திரங்களாலும், பலவிதமான விஷங்களை முறிக்கும் மூலிகை களாலும் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான்.

ஏமாற்றியே மன்னனது உயிரை பறிக்க முடியும் என்றெண்ணிய தக்ஷகன், நினைத்த மாத்திரத்தில் நினைத்த வேடத்தைக் கொள்ளும் நாகங்களிடம் பழங்கள் தர்ப்பையோடு நீர் எடுத்துக் கொண்டு பிராம்மண ரூபத்தில் வாருங்கள் என்று சில நாகங்களுக்கு கட்டளையிட்டான். மற்றும் “நாம் நமது காரியசித்தியை அடைய மன்னரிடம் கலங்காமல் சென்று இவற்றை அர்ப்பணம் செய்யுங்கள். என்றான்.

நாகங்களும் தக்ஷகனின் சொற்படியே நடந்துக் கொண்டன. மன்னனும் அப்பொருட்களைப் பெற்றுக் கொண்டு, பிராம்மணர்களுக்கு தன தான்யங்களை அளித்து அவர்களுக்கு விடை யளித்து விட்டு, பின் தன் மந்திரிகளோடு சேர்ந்து, இந்த தவசிகள் கொண்டு வந்த பழங்கள் மிகவும் ருசியுடையவை. ஆதலால் நீங்களும் சாப்பிடுங்கள் என்று கூறி ஒரு பழத்தை எடுத்தான். கடவுளின் நியதியும், முனிவரின் சாபத்தாலும் தூண்டப்பட்ட மன் னன் தக்ஷகன் இருந்த பழத்தையே கையில் எடுத்தான்.



அவன் கையில் வைத்திருந்த கனியி லிருந்து ஒரு சிறிய புழு தோன்றியது.

அதை தன் கையில் எடுத்தபடியே மந்திரி களிடம் சூரியன் மறைகிறார். எனவே நாகத்தின் விஷத்தைப் பற்றிய பயம் எனக் கில்லை. ஒரு வேளை அந்த முனிவர் சத்திய வானாக இருந்து இந்தப் புழுவேதக்ஷகன் என்று பெயர் கொண்டு என்னைத் தீண்டினாலும் அது என் குற்றத்திற்கு பரி ஹாரம்தான் என்றான்.




எம தர்மனால் தூண்டப்பட்ட மந்திரி களும் அதை ஆமோதித்தனர். அந்தப்புழுவை கழுத்தில் போட்டுக் கொண்டு மன்னன் பெரியதாக சிரித் தான். இறக்கும் தருவாய் என்பதால் அவன் அறிவு பிசகிப் போனது. மன்னன் சிரித்துக் கொண்டிருக்கும் போதே தக்ஷகன் மன்னனை இறுக்கிப் பிடித்து உடலில் வேகமாக சுற்றிக் கொண்டு கர்ஜித்தவாறு பரீக்ஷித்தை தீண்டி விட்டான்.

அரசன் ஆண்டி என்பது மரணத்திற்கு கிடை யாது என்பதால் தான் அரசர் முதல் ஆண்டி வரை அத்தனைப் பேரும் மரணத்தைக் கண்டு பயப்படும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஆண்டியாய் இருப்பவர்கள் ஓரளவிற்கு மரணத்தை எதிர்கொள்ளும் மனோதிடத்தைப் பெற்று விடுகின்றனர். ஆனால் அரசர்களாய் இருப்பவர்கள் மரணத்தைப் பற்றிய கனவை கண்டும் பயந்து விடுகிறார்கள்.

மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள. முதலில் வழியைத் தேடிய போது இருந்த பயமானது. அதற்குரிய காலம் கடந்தவுடன் தனது இயல்பு குணம் வெளிவரத் துவங்கி மரண தேவனையே கேலி செய்யும் நிலைக்குத் தள்ளப்படுவதும் விதியின் செயல்பாடே என்பது அடுத்த ஒரு சில மணித்துளிகளுக்குள் தெரிந்து விடுகிறது.

மரணத்திலிருந்து மீட்டெடுக்கும் வல்லமைப் பெற்ற கச்யபர் இருந்தும் அவரும் விலைப் போனார் என்பதும் உண்மையல்ல. தக்ஷகன் மாயையை வென்று தன் விருப்பத்திற்க்கிணங்க அனைத்தையும் செய்து முடிப்பவன் என்பதும் உண்மையல்ல.

உண்மை என்பது கடவுளின் நியதி. அந்த நியதியின் சங்கொலிதான் ச்ருங்கிமுனிவரின் சாபம். கச்யபர் என்பது மாயை. மாயை வென்று விட்டால்... கடவுளின் நியதி அதாவது உண்மை என்பது தோற்றுப் போவதாகும். எனவே மாயை யான கச்யபரை, உண்மையின் சேவகனான தக்ஷகன் மாயையாலேயே (பணத்தால்) வென்று விடுகிறான்.

தக்ஷகன் தன் விருப்பப் படியே அரசனைத் தீண்டி விட்டு செய்த கர்ஜனையால் நடு நடுங்கிப் போன மந்திரிமார்கள் மூலைக்கொருவராய் ஓடினர். பின் பரகதி அடைந்து விட்ட மன்னருக்கு செய்ய வேண்டிய கிரியைகளை செய்து முடித் தனர். அதன் பின் நாட்டின் நிலையைக் கண்டு

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

குழப்பமடைந்த அமைச்சர் பெருமக்கள் மிகச் சிறியவனாயிருந்த ஜனமேஜயனை அரசராக்கி வைத்தனர்.

ஜனமேஜயன் அவனது கொள்ளுத் தாத் தாவான தருமபுத்திரரைப் போன்று வீரனாகவும் தருமம் அறிந்தவனாகவும் விளங்கி ஆட்சி செய்து வந்தான். உரிய பருவத்தை அடைந்ததும் அவனுக்கு காசிராஜனின் மகளான வபுஷ்டமாவை மணம் செய்வித்து வைத்தனர். அவனது வேறு பெண்ணை நினையாமல் அவளோடு இனிதாய் இல்லறமும் நடத்தி வந்தான்.

அதே சமயம், மகாதபஸ்வியான ஜரத்காரு முனிவர் பூமியில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். மாலை வேளைகளில் எங்கும் திரியாது தங்கி விடுவார். பல நாட்கள் ஆகாரமின்றி இருப்பவர் என்றாவது ஒரு நாள் வாயுவை மட்டும் குடிப்பார். சரியான ஆகாரம் இல்லாததாலேயே மிகவும் களைத்துப் போய் காணப்பட்டார்.

ஒரு முறை அவர் சஞ்சரித்துக் கொண்டிருந்த போது ஒரு பள்ளத்தில் அவரது பித்ருக்கள் தலைக் கீழாகத் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களும் ஒரு கசத்தைப் பற்றித் தொங்கிக் கொண்டிருக்க அதுவும் அறுந்து விழும் நிலையில் இருந்தது.

அதைக் கண்ட ஜரத்காரு அவர்களிடம் நீங்கள் யார்? ஏன் இப்படி தலைக் கீழாய் தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் பற்றியிருப்பதும் அறுபடும் நிலையில் உள்ளதே. என் தவ வலிமையின் ஒரு பங்கால் நான் உங்களுக்கு உதவ முடியுமானால் கூறுங்கள். அல்லது முழுதபோ பலத்தையும் கூடப் பெற்றுக் கொள்ளலாம். நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் “அந்தணரே ! நாங்களும் தபோ பலம் மிகுந்தவர்கள் தான். வயதான காலத்தில் தாங்கள் எங்களுக்கு உதவி செய் வதாக சொன்னது தங்களின் கருணை உள் ளத்தை காட்டுகிறது. இது தபோ பலத்தால் தீர்க்கக் கூடியது அல்ல.எங்களது வம்ச பரம் பரை நிர்மூலமாகும் நிலையில் இருக்கிறது. வம்ச விருத்தியினால் மட்டுமே தீரக் கூடியது இது.

நாங்கள் மிக கடுமையான விரதம் மேற் கொள்ளும் யாயாவர மகரிஷிகள். எங்களது வம்சத்தில் சந்தானம் இல்லாததால் எங்கள் தபோ பலமும் நாசமாகிக் கொண்டிருக்கிறது. ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே உள்ளது. அதுவும் ஏனோ உதவும் நிலையில் இல்லை. ஜரத்காரு எனும் பெயருடைய அவனும் யோக நிலையிலேயே இருக்கிறான். அவனுக்கு மனைவி, மக்கள் ஏதுமில்லாததாலும், அதைப் பற்றிய சிந்தனையும் இல்லாமல் காட்டில் அலைந்துக் கொண்டிருப்பதாலும் நாங்கள் இப்படி அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எங்களது வம்சத்தை காலம் அழித்து விட்டது. மிச்சமிருப்பது ஒரே ஒரு நூலிழைதான். அதுதான் ஜரத்காரு. அந்த நூலிழையையும் காலரூபி எனும் எலி கடித்துக் கொண்டிருக்கிறது. அதுவும் அறுபட்டு விட்டால் நாங்கள் நரகத்தில் விழ வேண்டியதுதான். ஒரு வேளை நீங்கள் அந்த ஜரத்காருவைக் கண்டால் எங்களது இந்த நிலையை எடுத்துச் சொல்லுங்கள்.

ஹே சாதுவே! எங்கள் மீது நீங்கள் கொண் டிருக்கும் அன்பு பாராட்டுக்குரியது. நீங்கள் பரம புண்ய சிலராகவும், மகா தபஸ்வி யாகவும் காணப்படுகின்றீர் நீங்கள் யார்? தங்களது உறவினர் போன்று எங்களைப்பற்றி சிந்திக் கிறீர்களே நீங்கள் யார்? என்று சொல்லுங்கள். என்று பேசி முடித்தனர்.

மகா தபஸ்விகள் எனறு தங்களை அறிமுகப் படுத்திக் கொள்ளும் ரிஷிகள் தாங்கள் நரகத்தில் தள்ளப்பட்டு விடுவோமோ என்று பயப்படும் அளவிற்கு சக்தி வாய்ந்தது “சந்தான விருத்தி” என்பது. ஒரு மனிதன் தன் பலத்தைக் காட்டப் பிள்ளையை பெற விரும்புவதை விட, தன் சொத்துக்களை காக்கப் பிள்ளைகளை பெற நினைப்பதை விட தன் பித்ருக்களின் நலம் பெற வேண்டிப் பிள்ளையை பெற வேண்டும் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்த இதழில்....

- Thali, Ph:09786223577





## சகுனம்

# தடுக்கினால் ஏன் தண்ணீர் குடிக்க வேண்டும்....?

நீங்கள் ஒரு முக்கியமான வேலைக்காக வீட்டிலி ருந்து அவசர அவசரமாக புறப்படுகிறீர்கள். அந்த சமயம்பார்த்து வாசற்படியிலோ அல்லது கீழே கிடக்கும் ஏதாவது பொருளிலோ இடித் துக்கொள்கிறீர்கள்.

அதுபோன்ற நேரத்தில் நமது வீட்டில் இருக் கும் பெரியவர்கள், “புறப்படும்போதே சகுனம் சரியில்ல. கொஞ்ச நேரம் உட்கார்ந்து தண்ணீர் குடித்து விட்டுப் போ” என்பார்கள்.

இவ்வாறு அன்று பெரியோர்கள் கூறியதற்கு மிகுந்த உள்ளர்த்தம் இருப்பதை நாம் அறியாமல் விட்டுவிட்டோம். அவர்களைப் பார்த்து “போயா இன்னும் அந்த காலத்திலியே இருக்க” என்று ஏளனம் செய்கிறோம்.

இதல் மூட நம்பிக்கை என எதுவுமே இல்லை.

நாம் அவசரமாக புறப்படும் போதே “நிதானத்தில் இல்லை” என தெளிவாகிறது.

நிதானத்தோடு புறப்பட்டு இருந்தால் இடித்து கொள்ள மாட்டோம்... அப்படி நிதானம் இல்லாமல் செய்யப்போகும் காரியமும் வெற்றி பெறாது. அந்த நேரத்தில் நமது மூளையும் சரியாக சிந்திக்காது. அதனால்தான் சிறிது நேரம் மூளையை ஆசுவாசப்படுத்த, அரிய மருந்தாக முன்னோர் கண்டுபிடித்தது தண்ணீர். மூளையை ஆசுவாசப்படுத்திக்கொள்ள சிறிது தண்ணீர் குடித்தால் மூளை அமைதி பெறும். பிறகு நம் சிந்தனையும் சரியான விதத்தில் செயல்படும்.

மூளை புது தெம்புடன் திகழும்போது செய்யும் காரியம் வெற்றிபெறும்.



# கொடிமரம் அறிய வேண்டிய அற்புத தகவல்கள்



கோவிலில் திருவிழா தொடங்கும் சமயத்தில் கொடி ஏற்றம் நடந்ததை சங்க இலக்கியமான பட்டினப்பாலையில், மலர்மணி வாயில் பலர் தொழ கொடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காடுகளில் சில மரங்களில் கொடி சுற்றி படர்ந்து இருப்பதை பார்த்து இருப்பீர்கள் அதில் இருந்து தான் கொடி ஏற்றும் பழக்கத்தை நம் முன்னோர்கள் உருவாக்கியதாக கருதப்படுகிறது.

அது பல்வேறு நடைமுறைகளாக மாறி, இன்று துவஜஸ்தம்பம் என்று அழைக்கும் நிலை வரை வந்துள்ளது. நம் உடம்பில் உள்ள முதுகெலும்பு போன்றது கொடி மரம் என்று ஆகமங்கள் சொல்கின்றன. நம் முதுகுத் தண்டுவடத்தில் 32 எலும்பு வளையங்கள் உள்ளன. அது போலவே 32 வளையங்களுடன் கோவில் கொடி மரம் அமைக்கப்படுகிறது.

நம் முதுகுத் தண்டில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்களும், இடை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று நாடிகளும் அமைந்துள்ளன.

பொதுவாக இடை, பிங்கலை வழியாக செல்லும் பிராண வாயுவை, சுழிமுனை எனும் நடு நாடியில் நிறுத்தி இறைவனை தியானிக்க வேண்டும் என்பார்கள்.

இதனால் மனம் ஒரு நிலைப்படும் இறைவன் வெளிப்படுவான். இந்த அடிப்படையில் தான் கொடி மரம் அமைக்கப்படுகிறது கொடி மரம் ராஜகோபுரத்தை விட அதிக உயரமாக இருக் காது. அதே சமயத்தில் கருவறை விமானத்துக்கு நிகரான உயரத்துடன் இருக்கும். அது போல கருவறையில் இருந்தும், ராஜகோபுரத்தில் இருந்தும் எவ்வளவு தூரத்தில், எவ்வளவு உயரத்தில் கொடி மரம் அமைக்க வேண்டும் என்பதற்கு விதிகள் உள்ளன.



இது கோவிலுக்கு கோவில் மாறுபடும். ஆனால் பெரும்பாலும் கொடி மரத்தில் ஐந்தில் ஒரு பாகம் பூமிக்குள் இருக்கும்படி அமைப்பார்கள். இதன் அடிப்பகுதி அகலமாகவும், சதுரமாகவும் இருக்கும் இதற்கு சமபீடம் என்று பெயர். இந்த சதுர பாகம், படைப்பு தொழிலுக்கு உரியவரான பிரம்மாவையும், அதற்கு மேல் உள்ள எண் கோணப்பகுதியான விஷ்ணு பாகம் காத்தல் தொழிலுக்கு உரியவரான விஷ்ணுவையும், அதற்கு மேல் உள்ள நீண்ட ருத்ர பாகம், சம்ஹாரத் தொழிலை செய்யும் சிவபெருமானையும் குறிக்கும்.

அதாவது கொடி மரம் என்பது மும்மூர்த்திகளையும், அவர்கள் மேற்கொள்ளும் மூன்று தொழில்களையும் உணர்த்துகின்ற ஒரு அடையாளமாக திகழ்கிறது இதன் மூலம் கோவிலில் நுழைந்த உடனேயே வாழ்வின் மூன்று முக்கிய அம்சங்கள் நமக்கு உணர்த்தப்பட்டு விடுகின்றன.

கொடி மரம் முழுவதும் பல்வேறு இறை உருவங்களை சிற்பங்களாக வடித்திருப்பார்கள்

கொடி மர உச்சியில் மூன்று பட்டைகள் போன்ற ஏர் பலகை இருக்கும் இதனை திருஷ்டிப் பலகை என்றும் சொல்வார்கள். இதில் சிறு, சிறு மணிகட்டி தொங்க விட்டிருப்பார்கள். அந்த கொடி கோவில் உள்நோக்கியபடி இருக்கும். சிலகோவில்களில் மூன்று பட்டைக்கு பதில் ஒரே ஒரு பட்டையே இடம் பெற்றிருக்கும் மணி தொங்க விட்டிருக்க மாட்டார்கள்.

ஒவ்வொரு ஆலயத்துக்கு ஏற்ப இந்த அமைப்பு காணப்படும். ஒரே பட்டையுடன் இருக்கும் கொடி மர அமைப்பை கருடஸ்தம்பம் என்று சொல்வார்கள். சில ஊர்களில் கல்லில் கூட கொடி மரம் உள்ளது. இத்தகைய அமைப்புடைய கொடி மரத்தில் திருவிழா நாட்களில் கொடி ஏற்றுவார்கள்.

## ஏன் கொடி ஏற்றுகிறார்கள் தெரியுமா?

அதிலும் பல்வேறு தத்துவங்கள் அடங்கி உள்ளது. பொதுவாக கொடி என்பது ஆட்சி அதிகாரத்தை குறிக்கும். பழங்காலத்தில் ஒரு மன்னன் பக்கத்து நாடு மீது படையெடுத்து சென்று அந்நாட்டை பிடித்தால், அங்கு தன் அதிகாரம் வந்து விட்டத்தை குறிக்கும் வகையில் தனது கொடியை பறக்க விடுவான். அதே போன்று தான், திருவிழா நடக்கும் நாட்களில் அந்த ஊர் முழுவதையும் ஆண்டவன் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை உணர்த்த கோவில்களில் கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது.

இது மக்கள் மன நிலையில் மாற்றம் ஏற்படுத்தவும், விழா சமயத்தில் வெளியாட்களால் நோய் பரவல் ஏற்படுவதையும் தடுக்கிறது. இதை கருத்தில் கொண்டே கொடி ஏற்றுவதற்கு முன்பு கல்பம், அனுகல்பம் என்ற இருவகை சடங்குகளை செய்வார்கள். கொடி ஏற்றுவதற்கு முன்பு தேவதைகளை

ஆவாகனம் செய்வது கல்பம் எனப்படும்.

கொடி ஏற்றிய பிறகு தேவதைகளை ஆவாகனம் செய்வது அனுகல்பம் எனப்படும். இந்த சடங்குகள் மூலம் கோவில் கொடி மரங்கள் சக்தி மிக்கவைகளாக மாறுகின்றன. இத்தகைய மரத்தில் கொடி ஏற்றுவது இறைவனின் படைப்புத் தொழிலை குறிப்பதாக சொல்கிறார்கள்.

எப்படி தெரியுமா?

கொடி மரம் என்பது இறைவன், கொடிக் கயிறு சக்தி, கொடித் துணி ஆத்மா, கொடி ஏற்ற பயன்படுத்தும் தர்ப்பைக் கயிறு பாசம் ஆகியவற்றை குறிக்கும் கோவிலில் கொடி ஏற்றும் போது குருக்கள் வேதமந்திரங்கள் முழங்க, தர்ப்பைக் கயிற்றுடன் வெள்ளைத் துணியை வளைத்து, வளைத்து ஏற்றுவார்கள்.

இது உயிர்களையும், அறத்தையும் உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதை உணர்த்துகிறது இறைவனிடம் பாசக்கட்டு அறுமாறு நம்மனதை பலியிட வேண்டும், என்பதற்காக ஆன்மாவை பாசக்கயிறு சுற்றியுள்ளதை காட்டும் வகையில் கொடி மரத்தில் கயிறு சுற்றப்பட்டிருக்கும். லௌகீக வாழ்க்கையில் சிக்கித் தவிக்கும் நாம், எல்லோருமே பாசத்துக்கு கட்டுப்பட்டவர்கள்.

தர்ப்பைக் கயிறு எனும் பாசத்தால், கொடி துணி எனும் உயிர் கட்டப்பட்டுள்ளது. அந்த உயிர் இறைவன் திருவடியை அடைதல் என்ற தத்தவத்தை கொடி ஏற்றம் நமக்கு சுட்டிக் காட்டுகிறது. நமது உயிர் இறைவன் திருவடியை தஞ்சமடைய வேண்டுமானால் நம் மனமும் ஒரு முகமாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

இதை உணர்த்த கொடி மரம் நேராக நிமிர்ந்து நிற்பதாக சொல்கிறார்கள். இன்னொரு வகையில் சொல்வதென்றால் அசுர சக்திகளை



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033





அகற்ற, சிவகணங்களை கோவிலுக்குள் அழைக்க, ஆலயத்தையும் பக்தர்களையும் பாதுகாக்கவே கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது. அதனால் தான் கொடி மர உச்சியில், அந்தந்த ஆலய இறைவனின் வாகனம் ஒரு அடையாள சின்னமாக அமைக்கப்படுகிறது.

சிவன் கோவிலில் நந்தி, பெருமாள் கோவிலில் கருடன், அம்மன் கோவிலில் சிங்கம், விநாயகர் கோவிலில் எலி, முருகன் கோவிலில் மயில், சாஸ்தா கோவிலில் குதிரை உருவம் அமைக்கப்படும்.

இந்த உருவங்களைத்தான் அந்தந்த ஆலயங்களில் கொடிகளில் வரைந்து ஏற்றுவார்கள் கீழ் நிலையில் உள்ள ஆன்மாவை இறைவன் உயர்நிலைக்கு உயர்த்துகிறான் என்பதை இது காட்டுகிறது.

இப்படி பல்வேறு வகைகளில் சிறப்புடைய கொடி மரத்துக்கு மூல லிங்கத்துக்கு செய்யும் அபிஷேகம், அராதனை, நைவேத்தியம் முதலிய அனைத்தும் செய்ய வேண்டும் என்பது விதியாகும். அந்த அளவுக்கு கொடி மரம் மூலவருக்கு நிகரானது இன்னும் சொல்லப்போனால், கொடி மரம் அருகில் நின்று நாம் செய்யும் எல்லா பிரார்த்தனைகளும் மூலவரிடம் எதிரொலிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

கொடி மரத்தை தொட்டு வணங்கினால் மட்டும் போதாது சுற்றி வந்தும் வணங்குதல் வேண்டும். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஓரறிவை ஆறறிவு வணங்குகிறது என்று பாடியுள்ளார். ஓரறிவுள்ள மரத்தை ஆறறிவுள்ள மனிதன் வழிபடுகிறான் என்பது இதன் பொருள். இந்த வணக்க முறைக்கும் விதிமுறை உள்ளது.

நாம் கால் நீட்டி விழுந்து வழிபடும் போது, பின்புறம் எந்த தெய்வ சன்னதியும் இருக்கக் கூடாது.

ஆலயத்தின் உள்ளே பல சன்னதிகள் இருக்கும் என்பதால் தான் விழுந்து வணங்கக் கூடாது. கொடி மரம் இருக்கும் பகுதியில் எந்த சன்னதியும் இருக்காது என்பதால் தான் கொடி மரம் அருகே விழுந்து வணங்க வேண்டும் என்கிறார்கள்.

ஆண்கள் எப்போதும் 2 கால்கள், 2 கைகள், 2 காதுகள், நெற்றி, மார்பு ஆகிய 8 உறுப்புகளும் தரையில் படும் வகையில் அஷ்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். பெண்கள் தலை, 2 முழங்கால், 2 உள்ளங்கைகள் ஆகிய 5 உறுப்பபுகள் தரையில் பட பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். கொடி மரத்தை வழிபடும் போது நேராக நின்று வணங்கக் கூடாது.

கெட்ட கதிர்கள் நம் உடலுக்கு கெடுதல் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் அப்படி சொல்லி வைத்துள்ளனர். பொதுவாக கோவிலில் யாக வேள்விகள் நடத் தும் போது அவற்றை கொடி மரம் அருகில் தான் நடத்துவார்கள் இதனால் அந்த இடம் மந்திர சக்தி மிகுந்த இடமாக மாறும்.

அடிக்கடி யாக வேள்விகள் நடத்தும் பட்சத் தில் ஆல்பா, பீட்டா, காமா கதிர்கள் நிரம்பி விடும் ஆல்பா, பீட்டா இரு கதிர்களும் பாதிப்பை ஏற்படுத்தாது ஆனால் காமா கதிர்கள் பெரும் கெடுதல் ஏற்படுத்தி விடும் எனவேதான் கொடி மரம் எதிரில் நின்று கும்பிடாமல் சற்று ஓரமாக நின்று வழிபட்டு செல்ல வேண்டும்.

– நாகராஜன்,
போன் 08825844033



# ஸ்தூல உடம்பை காப்பாற்றினால் சூட்சம உடம்பை காக்க முடியும்



உலகின் மிகப்பெரிய அதிசயம் எது? என்று நீங்கள் எப்போதாவது தேடி பார்த்ததுண்டா? சீனப்பெருஞ்சுவர், தாஜ்மகால், சாய்ந்த கோபுரமென்று சில விஷயங்களை அதிசயம் என்ற பட்டியலுக்குள் சேர்த்து நாம் பார்க்கிறோம். இந்த பொருள்களின் மீது ஏற்படுகின்ற வியப்பினாலே உண்மையில் இவைகள்தான் அதிசயமென்று முடிவுக்கும் வந்துவிடுகிறோம். உண்மையில் இவைகள் அதிசயமா? இவற்றை தாண்டிய அதிசயங்களும் உண்டா? நிச்சயம் இருக்கிறது. அது வேறு எங்கோ கண்ணுக்கு காணாத இடத்தில் பயணம் செய்து பார்க்க வேண்டிய தூரத்தில் இல்லை. நம் அருகில், நமக்கருகில் நம்மோடு இணைந்தே அந்த அதிசயம் இருக்கிறது.

ஒரு பாத்திரத்தில் குழம்பு வைக்கிறோம் அந்த பாத்திரம் ஓட்டை என்றால் அதில் குழம்பு தங் குமா? ஏரிக்கரையை மேடாக்கி மதகுகளை அடைத்து நீரை தேக்குகிறோம். மதகு ஓட்டையானால் தண்ணீர் நிற்குமா? ஆனால் நமக்கு பக்கத்தில் உள்ள அதிசய பொருளுக்குள் தண்ணீர் மட்டுமல்ல எவராலும் பிடித்து வைக்க முடியாத காற்று நிற்கிறது.

அதிலும் அந்த பொருளில் ஒரு ஓட்டை அல்ல. ஒன்பது ஓட்டைகள் இருக்கிறது ஆனாலும் காற்று வெளியில் செல்லாமல் வருடக்கணக்கில்உள்ளே ஓடிக்கொண்டே இருக்கிறது.

இப்போது நான் அதிசயப்பொருள் என்று எதை குறிப்பிடுகிறேன் என்பதை நீங்கள் ஓரளவு புரிந்திருப்பீர்கள். ஆமாம் நிச்சயமாக நமது உடம்பை தான் அதிசயத்திலும் அதிசயம் என்று கூறுகிறேன். உடம்பை அதிசயம் என்று சொன்னவுடன் சித்தர்கள் “ஊத்தை சடலம் உப்பு உள்ள பாண்டம்” என்றெல்லாம் உடம்பை வெறுக்கிறார்களே, நெருப்பை வளர்த்து நீருக்குள்ளே நின்று கைகால் உறுப்புகளை அறுத்துப்போட்டு பட்டினியால் வயிற்றைச்சுருங்க செய்து இன்னும் எண்ணிலடங்காத சோதனைகளுக்கு ஆட்படுத்தி தவம் செய்கிறார்களே சில முனிவர்கள் அவர்கள் இறைவனின் பாதையை நோக்கி மனிதன் முன்னேறுகிற போது உடம்பு என்பது பெரிய தடை. அதை எப்படியாவது உதறித்தள்ள வேண்டும் என்ற வகையில் கருத்து தெரிவிக்கிறார்களே அனுபவத்தில் பார்த்தாலும் அவர்கள் கூறுவது சரியாகத்தானே இருக்கிறது. ஆசைகளுக்கெல்லாம் ஊற்றுக்கண்ணாக இந்த உடம்பு தானே இருக்கிறது பிறகு எதற்காக இதை அதிசயப்படைப்பு என்று வியந்து கூறி பாராட்ட வேண்டும் என்று உங்களுக்கு தோன்றலாம்.

சில சித்தர்கள் உடம்பை வெறுத்தவர்களாக, புறந்தள்ளியவர்களாக இருந்தார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் பல சித்தர்கள் உடம்பை வெறுக்கவில்லை. மாறாக அதை வளர்ப்பதற்கு வழி சொன்னார்கள். பதஞ்சலி மகரிஷியும், திருமூலரும் உடம்பை முக்தி என்ற இலக்கை நோக்கி பயணிக்க, சம்சார சாகரத்தில் உடம்பு படகாக இருக்கிறது என்று சொன்னார்கள். “உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே” என்று கூறிய திருமூலர் அந்த உடம்பு ஆயிரம் ஆண்டுகள் கூட வைரம் வாய்ந்த தன்மையோடு வாழ்வதற்கு வழி கூறி இருக்கிறார். மனித சரீரத்தைப்பற்றி விளக்கி இருப்பதை பார்க்கும் போது இன்றைய நவீன உடற்கூறு மருத்துவம் அவர் வகுத்த பாதையில் இன்னும் கால்பங்கு கூட பயணித்து வரவில்லை என்பது தெரிகிறது. உடம்பை எதற்காக வளர்க்க வேண்டும். அறுசுவை உணவை உண்பதற்காகவா? ஆடல் மகளீரின் அழகில் போதையேறி கிடக்க வேண்டும் என்பதற்காகவா? இரண்டுமே இல்லை.

நமது மனம் இருக்கிறதே அது ஒரு விந்தையான எந்திரம். அந்த எந்திரம் சரீரத்தில் மட்டும் தான் வேலை செய்யுமே தவிர சரீரத்தை தாண்டுவதற்கு விரும்பாது, வேலை செய்யாது. ஆனால் அந்த மனதை, சரீரத்தை தாண்டி பிரபஞ்சவெளியில் இருக்கும் இறைசக்தியோடு ஆத்மாவை இணைப்பதற்காக வெளியில் இழுக்க வேண்டும். அது சாதாரண போராட்டம் அல்ல. சந்திரகுப்த மௌரியனும், மகாஅலெக்ஸ்சாண்டரும் மோதிக்கொள்ளும் யுத்தத்தை விட கொடுமையானது.

அந்த போரை நடத்த, அதாவது அடங்காத மனதை அடக்க வலுவான உடம்பு வேண்டும். குஸ்திக்கு போகும் பயில்வான் போல, உடம்பு இருந்தால் தான் ஒருவனால் தியானத்தில் வெல்ல முடியும். கத்திரி வெயிலில் ஒருதுளி தண்ணீர்பட்டால் கூட இழுத்துக்கொண்டு படுத்துக்கொள்ளும் நோஞ்சான்களால் தியானத்தில் வெற்றிபெற முடியாது. எனவே திடகாத்திரமான உடம்பு வேண்டும்.

உடம்பு என்பது என்ன? அது எப்படி பட்டது? என்று சித்தர்கள் தருகின்ற விளக்கத்தை பார்த்தாலே நமது விழிகள் வியப்பால் தெறித்து விழுந்து விடும். நாம் எல்லோரும் நமக்கு ஒரு உடம்பு இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் சித்தர்கள் நமக்கு இரண்டு உடம்பு இருப்பதாக கூறுகிறார்கள். ஒன்று கண்களால் பார்க்க கூடிய இந்த ஸ்தூல உடம்பு, மற்றொன்று கண்ணுக்கு தெரியாத சூட்சம உடம்பு. இதில் எது தேவை? எது தேவையில்லை? என்பதெல்லாம் கிடையாது. இரண்டுமே தேவை, இரண்டுமே முக்கியமானது. ஆனால் ஸ்தூல உடம்பை காப்பாற்றினால் தான் சூட்சம உடம்பை காக்க முடியும் என்று நினைத்த நமது சித்தர்கள், கண்ணுக்கு தெரியும்

www.aanmeegamalar.com




உடம்பை கட்டி காப்பதற்காகவேபல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்கள். உடம்பு இயங்குவதற்கு ஆகாரம், தண்ணீர், சீதோஷ்ண நிலையை தாங்கிக்கொள்ளும் ஆடை அல்லது இருப்பிடம் இவைகளை விட நல்ல மூச்சுக்காற்று அவசியமென்று கருதினார்கள்.

நமது மூச்சுப்பை என்ற நுரையீரலின் இயல்புகளையும், அது காற்றை வெளியிலிருந்து வாங்கி உடம்பிற்குள் ஒவ்வொரு உறுப்பிற்கும் தேவையானதை பகிர்ந்து கொடுக்கும் இயக்கத்தையும், சித்தர்கள் அறிவியல் பூர்வமாக அறிந்திருந்தார்கள். இதுமட்டும் அல்ல எந்தெந்த நாட்களில், எந்தெந்த நேரத்தில் சுவாசத்தின் இயக்கம் எப்படி இருக்கும் என்றும் பட்டியல் போட்டுத்தருகிறார்கள். நமது மனித உடம்பு ஒரு நாழிகை நேரத்தில் முன்னூற்றி ஐம்பது தடவை சுவாசிக்கிறது என்றும், ஒரு முழு நாளில் அதாவது அறுபது நாழிகை நேரத்தில் இருபத்தி ஒராயிரத்து அறுநூறு முறை சுவாசம் நடத்துகிறது என்றும், கணக்கு போட்டு கூறுகிறார்கள். காலை நேரம் சுவாசம் எப்படி ஓடும், மாலைநேரம் அதன் வேகம் எப்படி இருக்கும், மதியமும், இரவும் அதன் நடையில் என்ன மாற்றம் வரும் என்பவைகளை எல்லாம் மிக அழகாக சுட்டி இருக்கிறார்கள்.

நாளங்கள் வழியாக இரத்தம் ஒடி உடம்பை செயல்பட வைக்கிறது என்று நமக்கு தெரியும். ஆனால் நம் உடம்பிற்குள் உள்ள இரத்த நாளங்கள், நரம்புகள், எலும்புகள், தசை நார்கள் இவைகள் அனைத்தையும் செயல்பட வைப்பது தசநாடிகள் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, புருஷன், காந்தாரி, அக்கினி, அலம்புவி, சங்கினி, குழுவி என்பது அந்த நாடிகளின் பெயர்கள். இந்த பத்து நாடிகளும் மனித உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களையும், மனதையும், உயிரையும் இயக்குகிறது என்பது சித்தர்களின் முடிவாகும். இந்த நரம்புகளை, சரியான விதத்தில் சுருதி சேர்த்தால் மனித உடம்பு ஒரு வீணையை போல ஈஸ்வரனையே மயக்கும் நாதத்தை எழுப்பும் என்பது சித்தர்களின் விதி.

எனவே இறைவனை எழுப்பி நம்மோடு அழைத்துக்கொண்டு உறவாடி அவனோடு இரண்டற கலந்துவிடுவதற்கு முதல் தேவையானது ஸ்தூல உடம்பு. அந்த ஸ்தூல உடம்பை மூப்பு, பிணி, சாக்காடு என்ற மூன்று வகை தோஷங்களும் அணுகாமல் பாதுகாக்க வேண்டும் என்பதற்கு பல வழிகளை சித்தர்கள் கூறி இருக்கிறார்கள். இதுவரையிலும் சித்தர்களை பற்றி பேசியவர்களும், எழுதியவர்களும் சித்தர்களின் தத்துவம், கோட்பாடுகள், ஆன்மநேய வெளிப்பாடுகள் போன்றவற்றையே அதிகம் தொட்டுக்காட்டி இருக்கிறார்கள். அதற்காக நாம் அந்த வழியில் வருவதற்கு முன்பாக நமது நடைமுறை வாழ்க்கைக்கு உகந்த வண்ணம் உடம்பு பாதுகாத்தல் என்ற விஷயத்தை பற்றி சித்தர்கள் கூறி இருக்கும் பல ரகசியங்களை அறிந்து கொள்ளவேண்டும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

www.aanmeegamalar.com







அசோகவன அனுமனாய் காட்சியளிக்கும் மூலவர் ஜெயமங்கள ஆஞ்சநேயர்.

# ஆஞ்சநேயா அறக்கட்டளை சார்பில் அனுமனுக்கு சிறப்பு அபிஷேகம்

கோவை மாவட்டம் காரமடை அருகேயுள்ள மருதூர் கிராமத்தில் நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த அனுமந்தராயசாமி திருக்கோயில் உள்ளது. இக்கோயிலில் ஆவணி மாத முதல் வார சிறப்பு பூஜை விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவினையொட்டி புலவர் தாச.அரங்கசாமியின் வில்லி பாரதம் தொடர் சொற்பொழிவு நடைபெற்றது. சிறப்பு அபிஷேகம், அலங்கார பூஜை முடிந்து அசோகவன அனுமனாய் மூலவர் ஜெயமங்கள ஆஞ்சநேயர் அபயம் அளித்தார். இந்த வழிபாட்டில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர். பக்தர்களுக்கு ஸ்ரீஆஞ்சநேயா அறக்கட்டளை சார்பில் அன்ன தானம் வழங்கப்பட்டது.

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

www.aanmeegamalar.com

# ஞானிகள் கட்டிய திருக்கோயிலில் கும்பாபிஷேகம்







ஞானிகள் சத்குரு சதாசிவபிரும்மேந்திரரால், கேளம்பாக்கத்தில் உள்ள திருவெளிச்சை எனும் கிராமத்தில் பசுபதீஸ்வரர், சுந்தர வரதராஜபெருமாள், பிரத்தியங்கரா, விஷ்வருப ஆஞ்சநேயர் திருக்கோயில்கள் கட்டப்பட்டன, இந்த திருக்கோயிலில் ஞானிகள் தினமும் அபிஷேகம் செய்து திருப்பாடல் களை பாடியவண்ணம் மெய்யன்பர்களுக்கு அருளாசி வழங்கிவந்தார், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஞானிகள் சமாதி அடைந்ததால் இத்திருக்கோயிலில் அவருக்கு சமாதி கட்டப்பட்டது.

ஞானிகளால் கட்டப்பட்ட இத்திருக்கோவிலுக்கு கடந்த 30.8.2018 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது நடைபெற்ற கும்பாபிஷேகம் இத்திருக்கோயில் 7வது கும்பாபிஷேகமாகும், மெய்யன்பர்களின் பெரும் முயற்சியால் கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது, இத்திருக்கோயிலில் ஞானிகளின் சமாதிக்கும் சேர்த்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஞானிகள் இதுவரை 120க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய திருப்பொருட்பா என்னும் நூல் மிகவும் பிரசித்தி பெற்றது. காஞ்சி சங்கராச்சாரியார் போன்ற மகான்கள் இத்திருக்கோவிலுக்கு வந்து ஞானிகளிடம் உரையாடியுள்ளனர்.

ஞானிகள் சிறுவயதாக இருந்த போது காஞ்சி மகான் என்று அன்புடன் அழைக்கப்படும், காஞ்சி பெரியவர் ஞானிகளின் பக்தியைக்கண்டு அவருக்கு அருளாசி வழங்கி, ஞானிகளின் ஒவ்வொரு செயலில் தானும் இருப்பதாக கூறியுள்ளார்.

ஞானிகள் இத்திருக்கோயிலில் அருபமாக இருப்பதால் இவரின் சமாதி முன்பு அமர்ந்து தியானம் செய்தால் மன அமைதியும், தியானமும் சித்திப்பதாக மெய்யன்பர்களால் கூறப்படுகிறது.

காலையில் மட்டும் அபிஷேக ஆராதனை நடைபெறும் இத்திருக்கோயிலில் பிரதோஷம், கிருத்திகை மற்றும் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெறும்.

சென்னையிலிருந்து செல்பவர்கள் கேளம்பாக்கம் சென்று கேளம்பாக்கம் டூ வண்டலூர் செல்லும் சாலையில், மலை ஆஞ்சநேயர் திருக்கோயிலின் எதிரில் உள்ள திருவெளிச்சை கிராமத்தின் உள்ளே சென்றால் 2 கிலோ மீட்டரில் ஞானிகளால் உருவாக்கப்பட்ட திருக்கோயிலை சென்றடையலாம். மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன் தொலைபேசி எண் 098410 28028 தொடர்பு கொள்ளலாம்.








ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.

www.aanmeegamalar.com